


# இயக்குநர் கையேடு

# கேலக்ஸி எக்ஸ்பிரஸ் விபிஎஸ் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கின்றோம்!

நீங்கள் பறந்து செல்ல எல்லாம் ஆயத்தமாக இருக்கின்றது. உங்களுடைய திருச்சபை மற்றும் சமுதாயத்தில் உள்ள குழந்தைகளின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றக்கூடிய ஒரு வார விசேஷ நிகழ்ச்சிகளை செயல்படுத்துங்கள்!

உங்கள் திருச்சபை அல்லது குழுவை 'கேலக்ஸி எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு விண்கலமாக மாற்றி, அங்கு ஒவ்வொரு நாளும் முழு குழுவும் வானுலகிற்கு பறந்து சென்று தேவனுடைய ஆச்சரியமான படைப்புகளைக் காணும்படியாக ஆய்வுப் பயணம் மேற்கொள்ளுவதைக் கண்டு உங்கள் ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைவார்கள். சிறுவர்கள் அந்த விண்கலத்தில் பறக்கும்போது மகிழ்ச்சியால் நிறைந்து, சிறு கோள்களின்மேல் மோதிவிடாமல் இருப்பதற்காக வலது மற்றும் இடது புறமாக விண்கலம் சாயும். விண்கலம் மேலே கிளம்பும் போதும், தரையில் இறங்கும் போதும் கேட்கப்படும் ஒலிப்பதிவு சத்தமும், கேப்டன் மற்றும் உதவி ரோபோவும் சேர்ந்து நடத்தும் தினசரி குறுநாடகங்களும் சிறுவர்களின் கற்பனைக்கு உயிரூட்டுவதாக அமையும்.

ஒவ்வொரு நாளும் நிலாவின் மேலோ, ஒரு நட்சத்திரம் அல்லது வேறொரு கிரகத்தின் மேலோ இருக்கும் விண்வெளி நிலையம் ஒன்றிற்கு சிறுவர்களை நீங்கள் பயணமாக அழைத்துச் செல்லுவீர்கள். அங்கே அவர்கள் மோசேயினுடைய வாழ்க்கையிலிருந்து தேவனுடைய மகிமையைப்பற்றி கற்றுக் கொள்ளுவார்கள். எல்லோரும் சேர்ந்து ஒன்றாகப் பாடி, அப்பாடல்களை முழுமையாக்க அவைகளுக்கு செய்கைகள் செய்து மகிழுவார்கள்.

"பாலத்தின்" மேல் சிறிது நேரம் கழித்துவிட்டு, சிறுவர்கள் அவர்களின் வயதுக்கு ஏற்றபடி வகுப்பு வாரியாக பிரிக்கப்பட்டு, விண்கலத்தைச் சுற்றி வருவார்கள். அதன்பின் அவர்கள் பயிற்சி வகுப்புச் சென்று, தங்களுடைய கையேடுகளில் செய்ய வேண்டியதை செய்து, பாடத்தை மறு ஆய்வு செய்து, கைவேலைகளை வடிவமைத்து உருவாக்கி, சிற்றுண்டிக்காக உணவுச் சாலைக்குச் சென்று, பாடத்திற்கான நடைமுறை பயன்பாட்டைக் கண்டு பிடிப்பார்கள். இந்த சிறிய குழுக்களில் உங்களுடைய மாணவர்கள் ஒருவரையொருவரையும், அவர்களது ஆசிரியர்களையும் அறிந்து கொள்ளுவார்கள். அது வருடம் முழுவதும் நிலைத்திருக்கும் ஒரு புதிய உறவினை அமைத்துக் கொடுக்கும்.

சில வேடிக்கையான விண்வெளி விளையாட்டுகளுக்கு எல்லா சிறுவர்களையும் ஒன்றாக "பாலத்திற்கு" அழைப்பது மிக எளிது. அன்றைய நாளை "கேலக்ஸி எக்ஸ்பிரஸ்"ன் புதிய சிடியிலிருந்து சில பாட்டுகளைப் பாடியும், ஒரு ஜெபம் செய்தும் முடிக்கலாம். மேலும் அடுத்த நாள் விடுமுறை வேதாகமப் பள்ளிக்கு அவர்களை வரும்படி அழைக்க மறக்க வேண்டாம்!

இந்த விடுமுறை வேதாகமப் பள்ளியை நீங்கள் மகிழ்ந்து, அனுபவிப்பீர்கள் என்ற நான் நம்புகின்றேன். உங்களுடைய கற்பனைத் திறனை இதில் பிரயோஜனப்படுத்த இந்த வி.பி.எஸ்.யை இவ்வுலகை விட்டு வெளியே இருக்கும் ஒரு அனுபவமாக மாற்றுவீர்கள் என நம்புகின்றேன்!

சகோதரி கிறிஸ்டினா கிரவுஸ்



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1
நன்றி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 2
மேலான கண்ணோட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 3
இந்த விபிஎஸ் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது . . . 5
கூடுதலான யோசனைகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 9
பாடம் 1 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 11
பாடம் 2 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 15
பாடம் 3 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 19
பாடம் 4 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 23
பாடம் 5 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 27
நகல் எடுக்க வேண்டிய விபிஎஸ் பொருட்கள் . . . . . . . . . . . 31
சான்றிதழ், அழைப்பிதழ் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 35
இணையதளத்தில் முழு விபிஎஸ் யை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். . . . . . . . 37


## சிறுவர்கள் முக்கியமானவர்கள்

www.ChildrenAreImportant.com


கேலக்ஸி எக்ஸ்பிரஸ் “சிறுவர்கள் முக்கியமானவர்கள்” என்ற நிறுவனத்தினால் எழுதப்பட்டிருக்கிறது. எங்களுக்கே அனைத்து உரிமையும் உள்ளது. எங்களுடைய அனுமதி இன்றி, எங்களுடைய பொருட்களை இலவசமாக இணையத்தளத்திலிருந்து எடுத்து, இலவசமாக உபயோகித்து, இலவ சமாக அச்சிட்டு இலவசமாக மற்ற திருச்சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் கொடுக்கலாம்.


நீங்கள் சிறுவர்களின் வாழ்க்கையை மாற்ற இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு உதவ இருக்கிறோம்!


மேலும் விபரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:
info@childrenareimportant.com or 01-52-592-924-9041




எல்லா வேதாகம வசனங்களும் தமிழ் O.V. ல் இருந்து எடுக்கப்பட்டது.

முழு குழுவிற்கும் நன்றி!

Creative Team of CAI: Jetender Singh, Blessy Jacob, Dwight Krauss, Jacob Kuruvilla, Marcos, Mike Kangas, Prajwal Sharma, Rubén Darío, Suki Kangas, Verónica Toj, and Vickie Kangas.

மெக்சிக்கோவில் அச்சிடப்பட்டுள்ளது.

# வழிகாட்டும் பகுதி














மேலான கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| “தேவனைக் கூப்பிடு!”<br>மோசேயின் பிறப்பு<br>தேவன்<br>**பெரியவர்** | இந்தப் பாடத்தின்போது, “தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்” என்ற சொற்றொடரை மாணவர்கள் ஒவ்வொரு முறை கேட்கும்போதும், அவர்கள் “ஆண்டவரே எனக்கு உதவும்” என்று பதில் கூறி, தேவனை நோக்கி தங்கள் கைகளை உயர்த்தி குதிப்பார்கள். | “நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்.” சங்கீதம் 3:4. |
| “தேவனுக்குப் பதில் கொடு!”<br>மோசேயும் எரிகின்ற முட்செடியும்<br>தேவன்<br>**வியக்கத்தக்கவர்** | இந்தப் பாடத்தில் மாணவர்கள் “தேவனுக்குப் பதில் கொடு” என்று கேட்கும் ஒவ்வொரு நேரத்திலும் “ஆம் ஆண்டவரே!” என்று சொல்ல வேண்டும். அப்போது தங்கள் கையை காதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு “நான் இங்கே இருக்கின்றேன்!” என்று சொல்லும் போது ஒரு போர்ச்சேவகனைப்போல தங்கள் கால்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். | “யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற தேவனுடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.” ஏசாயா 6:8 |
| “தேவனுக்குக் கீழ்ப்படி!”<br>எகிப்தின் வாதைகள்<br>தேவன்<br>**அற்புதமானவர்** | பாடத்தின்போது “தேவனுக்குக் கீழ்ப்படி” என்று சிறுவர்கள் கேட்கின்ற ஒவ்வொரு சமயத்திலும் சிறுவர்கள் நிற்கும்போதும், சுற்றி நடக்கும்போதும் இன்னொரு சிறுவனுடன் இருக்கைகளை மாற்றிக் கொள்ளும்போதும் “நான் போய்க் கொண்டிருக்க வேண்டும்” என்று மாணவர்கள் பதில் சொல்லட்டும். | “அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக் கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கி றோம்.” 1 யோவான் 3:24 |
| “தேவனுக்குக் காத்திரு”<br>பகலில் மேக ஸ்தம்பமும் இரவில் அக்கினியும்<br>தேவன்<br>**பிரகாசமானவர்** | பாட வேளையில் “தேவனுக்குக் காத்திரு” என்ற சொற்றொடரை கேட்கும் போதெல்லாம் சிறுவர்கள் நான் ஆயத்தம் தான் என்று பதிலளித்து, குதித்து ஒருவரையொருவர் தாக்கி கொண்டே “ஆனால் நான் காத்திருக்க வேண்டும்” என்று கூறி, கைகளைக் கோர்த்துக் கொண்டு அமரவும். | “கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்” ஏசாயா 30:8ஆ |
| “தேவனை வழிபடு”<br>செங்கடலை கடப்பது.<br>தேவன்<br>**பயங்கரமானவர்** | தேவனை வழிபடுங்கள் என்ற சொற்களைப் பாடத்தினூடே கேட்கும் போதெல்லாம் சிறுவர்கள் “நாங்கள் உம்மை வழிபடுகின்றோம்” என்று தங்கள் கரங்களை உயர்த்தி அசைத்துக் கூறுகின்றனர். | “அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள்.” சங்கீதம் 150:1 |



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

| சாப்பாட்டு அறை | பயிற்சி வகுப்பு | பொறியியல் | விண்வெளி விளையாட்டுகள் |
|---|---|---|---|
| **ரோபோக்கள்**  தொலை நோக்குக் கருவிகள் |  | கூடைக்குள் மோசே  | ஒரு வார்த்தையை உண்டாக்குவது<br>ருசி பார்க்கும் திறன் |
| **மோசேயின் எரிகின்ற முட்செடி**  ஆச்சரியமான அளவு பெரியது. |  | எரிகின்ற முட்புதர்  | குடிக்கின்ற ரீலே ஓட்டப்பந்தயம்<br>வாழைப்பழம் சாப்பிடும் போட்டி |
| **வாதைகள்**  நகர்வு |  | உன் காலணிகளைக் கழற்று  | வேடிக்கையான ஒலிகள்<br>ஒட்டுகின்ற தலை |
| **மேகஸ்தம்பம்**  விண்கலங்கள் |  | கேலக்சி எக்ஸ்பிரஸ் ராக்கெட்  | குச்சியால் தாக்கு<br>பிரமிடு அமைத்தல் |
| **உலர்ந்த தரை வழியாகக் கடலைக் கடத்தல்.**  சூப்பர் நோவா |  | செங்கடலைக் கடத்தல்  | மெஸ்ஸி மார்ஸ்மெல்லோ டிராப்<br>கேக் ஓட்டம் |



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# இந்த விபிஎஸ் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது

## எளிதான விபிஎஸ்

உங்கள் கைகளில் எளிமையான, எளிதாக திட்டமிடக்கூடிய, எளிதாக செயல்படுத்தக்கூடிய விபிஎஸ் உண்டு. ஒரு தேதியை தேர்வு செய்துகொண்டு,சில தன்னார்வத் தொண்டர்களை சேர்த்துக்கொண்டு, சில விளம்பர அழைப்பிதழ்களை மக்கள் கூட்டமாக வசிக்கும் இடங்களில் சுற்றி தொங்க விடுங்கள். இப்பொழுது நீங்கள் செயல்படுத்த தயாராகிவிட்டீர்கள்!

விபிஎஸ்-ல் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய குழுவானபணியாளர்கள் அதில் இருப்பது அதிக வேடிக்கையாக இருக்கும். எனவே அதிகமான மக்களை ஈடுபடுத்தும்படியாக அதிலுள்ள பணியை பிரித்து வித்தியாசமான கடமைகளைஅந்தந்த குழு செய்யும்படியாக செய்திருக்கின்றோம்.

உங்களுடைய விபிஎஸ்-ன் வேலைச் சுமையை பிரிப்பதற்கான சில கருத்துக்கள்:

1 விபிஎஸ் இயக்குநர்
1 பாட்டு நடத்தும் தலைவர்
1 முக்கிய பாடத்தை பிரசிங்கிப்பவர்
2 நாடகத்தில் நடிக்கும் நடிகர்கள் (கேப்டனும், ரோபோவும்)
1 வகுப்பு ஒருங்கிணைப்பாளர் (மாணவர்களின் கையேடுகளை பார்வையிடவும், பாடங்களை மறு ஆய்வு செய்யவும்)
1 கைவினை ஒருங்கிணைப்பாளர்
1 சிற்றுண்டி ஒருங்கிணைப்பாளர்
1 விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்
6-10தலைவர்கள்(உங்களுடைய விபிஎஸ்-ல் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொருத்து ஒவ்வொரு சிறுகுழுவுக்கும் ஒரு தலைவர்).

## நாடகம் /குறுநாடகம்

ஒவ்வொருநாளும் கேப்டன் சிறுவர்களை “கேலக்ஸி எக்ஸ்பிரஸ்” விண்கலத்தில் தன்னுடைய துணைவரான ரோபோவுடன் சிறு தொலைவு பயணம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லுவார்.

விண்கலத்திற்கு பொறுப்பாகவும், வார நாட்களில் சிறுவர்கள் ஆவிக்குரிய காரியங்களை பெற்றுக் கொள்ளுவதின் திறமையை கண்காணிக்க வேண்டியிருப்பதாலும், உங்களுடைய கேப்டன் ஒரு பொறுப்பான நபர். அவர் தன்னுடைய ரோபோவை வந்திருப்போருக்கு அறிமுகம் செய்கின்றார். கவர்ச்சியற்ற, சில சமயங்களில் பழுதடைந்துள்ள ரோபோ பேசும்போது ஒழுங்காக வார்த்தைகளைப் பேசாமல் விசித்திரமான சத்தத்தை உண்டாக்கி உளரத்தான் செய்யும். அது தொடர்ந்து நகருவதற்கு அதனுடைய இணைப்புகளுக்கு எண்ணெய் போடவேண்டியுள்ளது.

ஒவ்வொரு நாளும் கேப்டனும் ரோபோவும் அந்த நாளுக்குரிய முக்கிய குறிப்பை அறிமுகப்படுத்தி அதைக் கேட்கும் சிறுவர்கள் ஒவ்வொருமுறையும் சொல்ல வேண்டிய பதில்களையும் கூறுவார்கள். சிறுவர்கள் தங்களுடைய சிறு குழுக்களில் கேட்கும் விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டையும் கேப்டன் அறிமுகப்படுத்துவார்.

விபிஎஸ்ஸின் ஒவ்வொரு நாள் துவக்கத்திலும் குறுநாடகத்திற்கான யோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைக் கொண்டு நீங்கள் அந்த நாளையும் முடிக்கலாம் அல்லது கதாபாத்திரங்கள் விளையாட்டுகளில் கலந்து கொள்ளலாம் அல்லது வகுப்புகளைச் சுற்றிவரலாம். கேப்டனையும் ரோபோவையும் அறிந்து கொள்ளுவதில் சிறுவர்கள் அதிக ஆர்வம் கொள்ளுவார்கள்!



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# நிகழ்ச்சி நிரல்

(2 1/2 மணி நேர நிகழ்ச்சி)

பாலம்

**உயர எழும்பு!**

(பாடல்கள்- 20 நிமிடம் ஆரம்ப நாடகம்- 10 நிமிடம்)

**கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி...**

(முக்கியமான பாடம் & மனப்பாட வசனம்- 20 நிமிடம்)

... நிலையங்களுக்கு ...

சாப்பாட்டு அறை

(சிற்றுண்ட நிலையம் & விண்வெளி நடைமுறைப் பயன்பாடு)

நிலையங்கள், 20 நிமிடம்

பொறியியல்

(கைவினை நிலையம்)

பயிற்சி வகுப்பு

(மாணவர் கையேடும், மறு ஆய்வு நிலையமும்)

... பாலத்திற்கு திரும்புதல் ...

பாலம்

**விண்வெளி விளையாட்டுகள்**

(விளையாட்டுகள்- 30 நிமிடங்கள்)

**பயிற்சியாளர்கள் வெளியேறுதல்**

(முடிவு பாட்டும், அறிவிப்புகளும்- 10 நிமிடம்)

# விளையாட்டுகள்

இந்த நிகழ்ச்சியின் விளையாட்டுகள் பல அணிகளாக பிரிக்கப்பட்ட மொத்த சிறுவர்களும் ஒரு பெரிய குழுவாக உட்கார்ந்த வண்ணம் விளையாடுவதாகும். (நீங்கள் 2 முதல் 4 அணிகள் வைத்துக் கொள்ளலாம்). சிறுமிகளுக்கு எதிராக சிறுவர்கள் விளையாடும்படி பிரிப்பது எளிதாக இருக்கும். ஒவ்வொரு விளையாட்டுக்கும், தங்களுடைய அணியின் சார்பாக சில தன்னார்வ தொண்டர்களை அனுப்ப வேண்டும், மற்றவர்கள் தங்களுடைய இருக்கையில் இருந்த வண்ணம் சத்தம் போட்டும், ஆர்ப்பரித்தும், சிரித்தும் உதவி செய்யலாம். அப்பொழுதுதான் சிறுவர்களுக்கு சலிப்பாக இருக்காது. ஒவ்வொரு நாளும் வித்தியாசமான பல விளையாட்டுக்களை குறுகிய நேரத்திற்குள்ளாக ஒவ்வொரு விளையாட்டிற்கும் தன்னார்வ தொண்டர்களை மாற்றி விளையாட வேண்டும்.
விளையாட்டுக்களில் முன்நிலையில் இருந்து பங்கு கொள்ளும் மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் நோக்கங்களில் ஒன்று. விபிஎஸ்- ன் மற்ற செயல்க ளில் சிறப்பாக நடந்து கொள்ளும் மாணவர்களை கண்டு பிடிப்பதுதான். இந்த மாணவர்களுக்கு அவர்கள் விளையாட்டுகளில் பங்கு கொள்ளலாம் என்பதை காட்ட ஏதாவது கொடுங்கள். ஒருவேளை அது அவர்களின் கழுத்தைச் சுற்றி அணிந்து கொள்ளுவதாகவோ, தங்களின் கையில் கட்டிக் கொள்ளக் கூடியதோ அல்லது அவர்களது ஆடையின் பையில் வைத்துக் கொள்ளக் கூடிய ஓர் அட்டையாகவோ இருக்கலாம்.
ஒவ்வொரு விளையாட்டிலும், நீங்கள் எவ்வளவு முன்னேற்பாடாக இருக்கின்றீர்களோ அவ்வளவு சிறப்பாக விளையாட்டு அமையும். இந்த விளையாட்டிற்கு நீங்கள் ஆயத்தம் செய்யும்போது, டிவி நிகழ்ச்சிகளில் வரும் "கேம் ஷோ" அல்லது "நிக்கலோடியன்" நிகழ்ச்சிகளை நினைத்துக் கொள்ளுங்கள். மாணவர்களுக்கு தங்கள் முன்னால் அணிந்து கொள்ள சில பளிச்சென்ற நிறத்துடன் கூடிய துணியை தேர்வு செய்யுங்கள். விளையாட்டு நேரத்தில் ஒலிகள் அல்லது இசை இருக்கலாம். மேலும் சில வேடிக்கையான அலங்காரங்களும் செய்யலாம். (கேலக்ஸி எக்ஸ்பிரஸ் சிடியில் விளையாட்டு நேரத்தில் ஒலிக்கக்கூடிய பாட்டுக்களை நாங்கள் உங்களுக்கு அளித்திருக்கின்றோம்). சில உண்மையான வேடிக்கைகளை உங்களுடைய விபிஎஸ்ஸில் சேர்க்க விலையில்லா பொருட்களை உபயோகியுங்கள். ஆயத்தமாகி, மகிழ்ச்சி அடையுங்கள்!

## சுழலும் நிலையங்கள்

ஒவ்வொரு நாளின் மத்திய நேரத்தில், சிறுவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு, நிலையங்களைச் சுற்றி வரு வார்கள். உ ணவு அறை (சிற்றுண்டி மற்றும் விண்வெளி நடைமுறை பயன்பாடு), பொறியியல் (கைவினைகள்), மற்றும் பயிற்சியாளர் வகுப்பு (மாணவர் கையேடுகளும், பாடமும் மறு ஆய்வும்). இந்த நிலையங்களைப் பற்றி அடுத்த பக்கத்தில் இன்னும் அதிகமாக வாசிக்கலாம்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# சுழலும் நிலையங்கள்




## சாப்பாட்டு அறை

### சிற்றுண்டி நிலையம்


சிற்றுண்டியை எப்படி தயாரிக்க வேண்டும் என செயல்முறை விளக்கங்களை நீங்கள் இங்கு காணலாம். மாணவர்கள் சிற்றுண்டியை சாப்பிடுவதற்கு முன்பு அதை ஒரு கைவேலையாக மகிழ்ச்சியுடன் அவர்கள் தயாரிப்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். எல்லாம் முடிந்த பிறகு எல்லாவற்றையும், தங்களையும் சுத்தம் செய்ய அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தரவேண்டிய தருணத்தை மறந்துவிட வேண்டாம்.

### உண்மைகள்

(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசித்தல்.)

சிற்றுண்டி சமயத்தில் மாணவர்களோடு விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை கலந்தாலோசித்து அது பாடத்தோடும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையோடும் எவ்வாறு தொடர்புடையதாயிருக்கிறது என்பதையும் கூறுங்கள். சிற்றுண்டி மற்றும் விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டையும் குறித்த தகவல்கள் உணவு அறை தலைவரின் நோட்டீஸில் காணப்படும்.

## பொறியியல்





### கைவேலை நிலையம்

கைவேலைக்கு தேவையான பொருட்கள் மற்றும் தகவல்களைப்பற்றிய ஆலோசனையுடன், அதற்கு ஒரு யோசனையையும் இங்கு கிடைக்கும். செலவை எவ்வளவு குறைவாக வைக்க முடியுமோ அவ்வளவு குறைவாக்கி, எல்லா கேலக்ஸி எக்ஸ்பிரஸ் விபிஎஸ் நிகழ்ச்சிகளும் ஒரு கைவேலைக்கு 1 முழு தாளை மட்டுமே பயன்படுத்தப்படுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. வடிவமைப்பை இணையதளத்தி லிருந்து எடுத்து, கைவேலையைப் பற்றிய தகவல்களை இயக்குநரின் கையேட்டிலும், பொறியியல் தலைவரின் கைப்பிரதியிலும் கண்டு கொள்ளுங்கள். வடிவமைப்பின் நகலையும் நீங்கள் பொறியியல் தலைவரின் நோட்டீஸிலும் காணலாம்.

## செயல்களில் இறங்கு!

ஒவ்வொரு நாளும் அந்த நாளுக்குரிய ஒரு சொற்றொடரையும், அதற்குரிய பதிலை செயல்களோடும் மாணவர்கள் கற்றுக் கொள்ளுவார்கள். இந்தச் செயல் அதிக முக்கியமானது. ஏனெனில் அப்பொழுதுதான் முக்கியமான பிரசங்க நேரத்தில் மாணவர்கள் சலித்துப் போகமாட்டார்கள். மேலும் அது விபிஎஸ்ஸை விசேஷமானதாக்கும். உங்களுடைய முழு விபிஎஸ் சமயங்களிலும் கேப்டன் அந்த நாளுக்குரிய சொற்றொடரைக் குறிப்பிடும்போது, அதற்கு என்ன பதிலுரைக்க வேண்டுமெனவும், அதனுடன் சேர்ந்த செயல் என்னவென்றும் மாணவர்களுக்குத் தெரிய வேண்டும். கேப்டன் மற்றும் ரோபோவும் சேர்ந்து நடிக்கும் நாடகத்தின் சமயத்திலும் அவர்கள் அதை அறிந்து கொள்ளுவார்கள். மேலும் அந்த நாளின் மற்ற சமயங்களிலும் நீங்கள் அதை உபயோகப்படுத்தலாம்.



## பயிற்சி வகுப்பு

### மாணவர் கையேடுகளும், மறு ஆய்வு நிலையமும்

வேதாகமக் கதையின் சில முக்கிய வார்த்தைகளுக்கு சைகை மொழியிலான தகவல்களை இங்கு நீங்கள் கண்டு கொள்ளலாம். இந்த வார்த்தைகளை சைகை மொழியில் கற்றுக் கொடுத்து, கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்கு கொடுத்து புதிரை விடுவிக்க யாராவது ஒருவருக்கு உதவி செய்யுங்கள். இந்த தகவலும்கூட பயிற்சியாளரின் வகுப்புத் தலைவரின் நோட்டீஸிலும் இருக்கின்றது.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



கிறிஸ்தவ ஊழியங்களில் சிறுவர் ஊழியமானது அதிக கரிசனையற்றதும், நிதி ஆதரவற்றதுமான ஊழியாக இருந்தாலும் அதிக பலனளிப்பதுமாக இருக்கிறது. ஆனால் இயேசுவை அறிய வேண்டிய இலட்சக்கணக்கான சிறுவர்கள்இருக்கின்றனர்.

எனவே நாங்ளே தாயரித்த, முழுமையான **ஞாயிறு பள்ளிகள், விடுமுறை வேதபாட திட்டங்கள்**, பயிற்சி பொருட்கள், மேலும் **சிறுவர் ஊழியத்திற்கான** பல சாதனங்களை அவர்களுக்கு ஏற்றார் போல உருவாக்க **எங்களது நேரத்தை அர்ப்பணிக்க** முன்வந்துள்ளோம்.

ஏற்கனவே, ஸ்பானிய, இலத்தீன் மொழிகளில் கீழ்க்கண்டவற்றை உருவாக்கியுள்ளோம்.

- *7* ஆண்டுகளுக்கான ஞாயிறு பள்ளி பாடத்திட்டம்
- *7* விபிஎஸ் பாடத்திட்டம்
- *14 DVD* க்கள் - விளக்கங்கள், பாடல்களுடன் நடனங்கள்
- *23* பாடல் *CD* க்கள்
- பயிற்சிப் புத்தகங்கள், வீடியோக்கள்
- திரைப்படங்கள்
- இயேசுவின் பிறப்பு, உயிர்த்தெழுதல் பற்றிய நிகழ்வுகளின் படங்கள்
- கைவேலை, வண்ணமிடும் புத்தகங்கள்

**இவ்வாண்டு இந்தியாவிலும்** எங்கள் விபிஎஸ் ஊழியத்தை ஆரம்பிக்கிறோம். **ஞாயிறு பள்ளி பாடத்திட்டம்** மற்றும் அதற்காக **ஆசிரியப் பயிற்சி பொருட்கள்** நாங்கள் தொடங்கியுள்ளோம்.

**சிறுவர்கள் முக்கியமானவர்கள்** என்று நம்புகிறோம்.



India.ChildrenAreImportant.com

எங்களுடைய அனுமதி இன்றி, எங்களுடைய பொருட்களை இலவசமாக இணையத்தளத்திலிருந்து எடுத்து , இலவசமாக உபயோகித்து, இலவசமாக அச்சிட்டு இலவசமாக மற்ற திருச்சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் கொடுக்கலாம்.

*பல மொழிகளில் இந்த பொருட்களை எழுதவோ , அவற்றை அச்சிடவோ, விநியோகிக்கவோ ஆர்வமிருப்பின் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். உங்களுடன் பேச நாங்கள் விரும்புகிறோம்! *info@childrenareimportant.com*

# கூடுதலான கருத்துக்கள்

பொறியியல்

## கூடுதலான கைவினைகள்



இந்தப் படம் பசை மற்றும் வண்ணப்பொடி அல்லது மின்னும் பொடியைக் கொண்டு உருவாக்கப்பட்டது.
இது பேரொளியுடன் தோன்றும் ஒரு விண்மீனைப் போன்று மகிழ்ச்சி மற்றும் துதியின் வெடிச் சிதறலை சித்தரிப்பதாக இருக்கும்! தேவனையும் அவர் நமக்காக செய்தவைகள் எல்லாவற்றையும் நாம் நினைக்கும்போது நாம் உணருகின்ற மகிழ்ச்சி போன்றது.
இதன் தலைப்பு "நான் தேவனை வழிபடுவேன்."



கைவண்ணச் செயல்கள் விண்வெளியிலிருந்து பூமியை நோக்கினால் பூமி எப்படித் தோன்றுமோ அதன் படம்.

1. ஒரு காகிதத் துண்டின் மையத்தில் ஒரு கருப்பு மார்க்கரினால் (Marker) பெரிய வட்டத்தை வரையுங்கள்.
2. மாணவர்களுக்கு பூமியை வர்ணம் பூசும்படி பச்சைநிற மார்க்கரை கொடுங்கள். அடுத்ததாக தண்ணீருக்கு நீல வர்ணம் பூச நீல நிற மார்க்கரைக் கொடுங்கள்.
3. இப்போது மாணவர்கள் தண்ணீரைக் கொண்டு அதற்கு வர்ணம் பூசட்டும்.
4. அது காய்ந்தவுடன், மாணவர்கள் கருப்பு கோடுகளையொட்டி வெட்டி, தங்களுடைய படைப்புகளை கருப்பு காகிதத்தில் ஒட்டவும்.

## வகுப்பு செயல்பாடுகள்



ஒவ்வொரு சிறுவனும் தன்னுடைய சொந்த மேகத்தை உருவாக்க வேண்டும். அதன்பின் வகுப்பில் செய்த எல்லா மேகத்தையும் ஒன்று சேர்த்து மேகஸ்தம்பத்தை அமைக்க வேண்டும். மேகங்களை உருவாக்க, முதலில் அதை வரைந்து, அதை வெட்டியெடுத்து, அதன்மேல் வர்ணம் பூசிடுங்கள் (கடைகளில் வெள்ளை அல்லது மின்னும் துகள்கள் கிடைக்கும்). அக்னி ஸ்தம்பத்திற்கும் அதைப் போன்றே செய்யுங்கள்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



உங்களுடைய ஆசிரியர்களுக்கு இந்த ஆடைகள் மிகவும் அழகாக அமைந்து உங்களுடைய விபிஎஸ்-க்கு அதிக சுவை சேர்ப்பதற்கு உதவியாக அமையும்! 2 லிட்டர் அளவு கொண்ட சோடா பாட்டில்களை உலோகத்தாள் அல்லது மந்தாரமான பட்டை கொண்டு சுற்றி மூடி நெருப்பு பிழம்புகளைப் போன்று தோற்றமளிக்க மெல்லிழைத் தாள்களை (tissue paper) ஒட்டி, ஒரு கம்பி அல்லது கயிற்றின் துணை கொண்டு உங்கள் பின்புறமாகக் கட்டிக் கொள்ளுங்கள். இந்த “ஜெட்” பையை அணிந்து உங்களுடைய ஆசிரியர்கள் பிரமாதமாக காட்சியளிப்பார்கள்.

சிறுவர்கள் உங்களுடைய விபிஎஸ்ஸின் படங்களைக் காண ஆவலோடிருப்பார்கள்!







நீங்கள் உபயோகப்படுத்தும்படியான மேலும் இன்னொரு விளையாட்டான கைவினை இங்கு உண்டு! ஒரு குச்சியை எடுத்து அதின் ஒரு பக்கம் நெருப்பைப் போன்றும், அடுத்த பக்கம் மேக ஸ்தம்பத்தைப் போன்றும் அலங்கரியுங்கள்!

## செயல்முறை: நிலாவில் குழி



உங்களுடைய மாணவர்கள் ஒரு மாவுக் கலவையை உண்டு பண்ணி, அதில் சிறிய கூழாங்கற்களை போடும்படியாகச் செய்யுங்கள். உங்கள் கண்களுக்கு முன்பாக குழிகள் ஏற்படுவதைப் பாருங்கள்!

மாவுக் கலவை : 4 கப் மாவும் 1/2 கப் எண்ணெயும்.


# 1 முதல் பயணம்

# தேவனைக் கூப்பிடு!




விண்வெளி துறைமுகம்:

நெபுகோபியோ





## உயர எழும்பு

துவக்க நாடகம்

தேவனுடைய மகிமையைக் காணும்படியாக ஒரு வாரக்கால மகிழ்ச்சியூட்டும் சாகசமான பயணத்தை மேற்கொள்ளப் போவதற்காக சிறுவர்களைக் கேப்டன் வரவேற்கின்றார். அடுத்ததாக தன்னுடைய உதவியாளரான ரோபோவை அறிமுகப்படுத்துகின்றார். இன்று அவர்கள் சனிக் கிரகத்திற்குச் சென்று, “நெபுகாப்பியோ” என்ற விண்வெளி நிலையத்தைப் பார்வையிட்டு அங்கிருந்து வெகு தொலைவிலுள்ளவைகளைப் பார்க்கும்படி சிறப்பான தொலைநோக்கு கருவிகளை உபயோகப்படுத்தப் போவதை அவர்களுடன் கேப்டன் பகிர்ந்து கொள்ளுகின்றார். மிகவும் பழைமையான சிறப்புமிக்க புத்தகமாகிய வேதபுத்தகத்திலிருந்து நேரடியாக தேவனுடைய மகத்துவங்களை ஒவ்வொரு நாளும் அவர்கள் கற்றுக் கொள்வார்கள் என்பதையும் தலைவர் குறிப்பிடுகின்றார். விண்வெளிக்கு செல்ல சிறுவர்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை என தலைவர் ஏளனம் செய்து கருத்துப் பாடலை அறிமுகம் செய்கின்றார். எனவே ரோபோ பாட்டுப் பாட தலைவர் எல்லோரையும் முக்கிய பாடலில் நடத்திச் செல்லும்படி செய்யுங்கள். கருத்துப் பாடல் பாடிய பிறகு புறப்பட்டு, பயணத்தை மேற்கொள்ளும்போது குறுநாடகத்தை தொடர்ந்து நடத்தலாம்.

“கேலக்ஸி எக்ஸ்பிரஸ்” விண்கலம் கூட்டமான சிறுகோள்களை எதிர்கொண்டு, அவற்றில் ஏதாவதொன்றில் மோதிவிடாதபடி விலகிச் செல்லுமாறு தங்களை செயல்படுத்துகின்றது. ரோபோ அதிக உணர்ச்சிவசப்படக் கூடியவர், பதட்டப்படுபவர், அவருக்கு மோதிவிடுவோமோ என்ற பயம். தேவனை நோக்கி கூப்பிட கற்றுக் கொள்ளும்படியாக கேப்டன் அவருக்கு உதவி செய்கின்றார்.

கூட்டத்திலுள்ள சிறுவர்களுக்கு அந்த நாளுக்குரிய வார்த்தைகளான “தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்” என்பதை போதித்தும் சிறுவர்கள் தேவனை நோக்கி தங்கள் கைகளை உயர்த்தி, குதித்து “ஆண்டவரே எனக்கு உதவும்” என்று பதில் கூறவும் கற்றுக் கொடுக்கின்றார். ரோபோ அதைக் கூற பலமுறைகள் முயற்சித்து, கற்றுக் கொண்டு, மாணவர்களுடன் சேர்ந்து செய்கை செய்கின்றார்.

கடைசியில் அவர்கள் யாவரும் பத்திரமாக சனிக் கிரகத்தை அடைகின்றனர். அந்த கிரகத்தை சுற்றியுள்ள வளைவுகள் வேகமாக செல்லுவதற்கான வழி என ரோபோ நினைக்கின்றார். அவர்கள் இறங்குவதில் சிக்கல் இருந்ததால் ரோபோ மறுபடியுமாக சிறுவர்களோடு சேர்ந்து “தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்” என்று மறுபடியும் கதறுகின்றார். அதற்கு சிறுவர்கள் அனைவரும் “ஆண்டவரே எனக்கு உதவும்” என்று பதிலுரைக்கின்றனர்.

வேதாகமத்திலிருந்து விண்வெளி வீரர் பயிற்சியை மேற்கொள்ள சரியான நேரத்தில் அவர்கள் வந்திறங்கினார்கள்! (சிறுவர்களோடு வேடிக்கையாகக் கீழ் இறங்கிய பிறகு, முக்கிய பாடத்தை ஆரம்பியுங்கள்.)



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



## கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி


(முக்கிய பாடம்) மோசேயின் பிறப்பு

இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார். (யாத்திராகமம் 2:23-25)

தேவனுடைய ஜனங்கள் ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக் கொண்டார்கள் என்று வேதாகமத்திலுள்ள யாத்திராகமம் 2ம் அதிகாரம் நமக்குக் காட்டுகின்றது. நாம் அதைத்தான் இன்று கற்றுக் கொள்ளுகின்றோம். எதைக் குறித்தாவது நமக்கு உதவி தேவைப்படும்போது நாம் தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும்.

இஸ்ரவேலர்கள் அடிமைத்தனத்திலிருந்தார்கள். மேலும் வாழ்க்கையில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிலே ஏழைகள் அதிகம் பேர் இருந்தனர். மேலும் அவர்கள் சாப்பிட மிகக் குறைந்த அளவு உணவே இருந்தது. நம்முடைய பெற்றோர்கள் எப்பொழுதுமே சண்டை போட்டுக் கொண்டிருப்பதால் சில நேரங்களில் நாம் பள்ளிகளில் கேலி செய்யப்பட்டோ, கிண்டல் செய்யப்பட்டோ அல்லது நமக்குள்ளாகவே போராடிக் கொண்டிருக்கலாம். அந்த சமயங்களில்தான் நாம் தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும்! இந்த நேரத்தில் தேவனுடைய ஜனங்கள் ஏழைகளாகவும், அதிக பசியுற்றவர்களாயும் இருந்தது மட்டுமல்லாமல், எகிப்தியர்கள் அவர்களைப் பார்த்து கேலியும், ஏளனமும் செய்தனர். எல்லா மன அழுத்தத்தோடும், அவர்கள் தங்களுக்குள்ளாகவே சண்டையும் போட்டுக் கொண்டார்கள். வாழ்க்கை கடினமாக இருந்தது. நிலமையை இன்னும் அதிக மோசமாக்க, எகிப்து அரசர் எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்று போடும்படி உத்தரவிட்டார்! அது மிக மோசமான உபத்திரவம்!! தேவனை நோக்கி யாராவது கூப்பிட வேண்டுவதாயிருந்தால், அது இஸ்ரவேலராய்த்தான் இருக்க வேண்டும்.
ஆனால் தேவன் வேறொரு திட்டத்தை வைத்திருந்தார். மோசே பிறக்கும்போது அவர் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். கொலை செய்யப்படாமல் அவனைக் காத்துக் கொண்டார். மோசமான போர்சேவகர்களிடமிருந்து மோசேயின் தாயார் எவ்வளவு காலம் ஒளித்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவு காலம் ஒளித்து வைத்திருந்தார்கள். ஏனெனில் அவர்கள் அவனை எடுத்துக் கொண்டு போய் கொன்றுவிடுவார்கள். அவனை இன்னும் தொடர்ந்து ஒளித்து வைக்க முடியாத நேரம் வந்தது. அந்த சமயத்தில்தானே அவளுக்கு ஒரு நல்ல எண்ணம் தோன்றியது. தேவனை நோக்கி கூப்பிட்டாள்! அவனுடைய தாயார் அவனை ஒரு கூடையிலே வைத்து நதியிலே விடும்போது தேவன் மோசேயை கவனித்துக் கொண்டிருந்தார். ஒருவேளை அவன் மூழ்கி இருக்கவோ அல்லது தண்ணீரால் எடுத்து செல்லப்பட்டிருக்கவோ கூடும். ஆனால் தேவன் அவன் பத்திரமாய் இருப்பதை உறுதி செய்தார். எகிப்து அரசரின் வீட்டின் அருகே அந்தக் கூடை மிதந்து சென்றது. அங்கேதானே பார்வோனின் குமாரத்தி அவனைத் தன் மகனாக எடுத்துக் கொள்ள தீர்மானித்தாள். நம்முடைய தேவன் மகத்துவமுள்ளவர்! அவன் குழந்தையாக கூடையிலே வைக்கப்பட்டு, நதியிலே மிதந்து வரும் போதும் மோசேயின் வாழ்க்கைக்கு தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். தேவன் உங்களையும் என்னையும் காண்கின்றார். மேலும் நம் ஒவ்வொருவரையும் அவர் அறிந்திருக்கிறார்.

தேவனை நோக்கி கூப்பிடுவது என்ற ஒரு முக்கியமான பாடத்தை நாம் இன்று கற்றுக் கொள்ளலாம். காலங்கள் உங்களுக்கும், எனக்கும் கடினமாகிக் கொண்டு போகலாம். உதாரணமாக, நம்முடைய பள்ளியில் ஒரு கடினமான நேரத்தை சந்திக்கலாம் அல்லது உன் சகோதரனோடு சண்டை போட்டுக் கொள்ளலாம். தேவனை நோக்கி கூப்பிடுவதுவே எல்லாவற்றிலும் சிறப்பான காரியம். இஸ்ரவேலர்கள் அதைத்தான் செய்தார்கள். அவர்களால் தேவனை நோக்கிக் கூப்பிட முடிந்தது. மேலும் அவர் அவர்களின் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை நினைவுகூர்ந்தார் என்று வேதாகமம் கூறுகின்றது. தேவன் அவர்களைக் கண்டார். அவர்களை அறிந்திருந்தார். அவர்கள்மேல் மனதுருகி அவர்களை இரட்சித்தார். இஸ்ரவேலனாகப் பிறந்து, சாவிலிருந்து மீட்கப்பட்டு, ஒரு கூடையின் மூலம் தப்பித்து, பார்வோனின் குடும்பத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட மோசேக்கு தேவன் ஏற்கனவே ஒரு திட்டம் வைத்திருந்தார். எனவே இன்று நாம் கற்றுக் கொண்டதை செயல்படுத்தி தேவனை நோக்கிக் கூப்பிடுவோம்!



## விண்வெளி கண்டுபிடிப்பு

தேவன்

**பெரியவர்**



## தகவல்...

வேதாகம வசனம்.

"நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்." சங்கீதம் 3:4.




www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

## ரோபோக்கள்

### சிற்றுண்டி

மெலியதான உலர்ந்த பிஸ்கோத்துடன் ஆரம்பியுங்கள். இயந்திர மனிதனை பிஸ்கோத்தைச் சுற்றித் தாளில் வரைந்து மிட்டாய்களை பிஸ்கோத்தின்மேல் வையுங்கள்.

அல்லது ஆரோக்கியமான ரோபோக்களை உண்டாக்க கொஞ்சம் பாலாடை கிரீமை எடுத்து வெட்டப்பட்ட உறைந்த சிறிய காய் துண்டுகளின்மேல் ஒட்டுங்கள்.



## கருத்துரை


(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசிக்கலாம்).

## தொலை நோக்குக் கருவிகள்

தொலைநோக்குக் கருவிகள் ஆச்சரியமளிக்கக் கூடியவைகள். அரிதான அண்டசராசர விரிவாக்கத்தை அதைக் கொண்டு நாம் காணலாம். நம்முடைய கண்களைக் கொண்டு பூமியிலிருந்தபடியே கிரகங்களையும், நிலாக்களையும் நாம் தெளிவாகக் காணலாம். வானத்திலே அவைகள் சிறு புள்ளிகளாகக் காட்சியளிக்கின்றன. ஆனால் தொலைநோக்குக் கருவி கொண்டு அவற்றை இன்னும் அருகாமையில் காணலாம். கிரகங்களில் உள்ள பள்ளங்களையும், அண்டசராசங்களையும், நட்சத்திர மண்டலங்களையும் மற்றும் ஆர்வத்தைத் தூண்டும் பிரமிப்பான காரியங்களையும் நாம் காணலாம். ஒரு தொலைநோக்குக் கருவி கொண்டு வெகு தொலைவில் உள்ளவற்றை அருகில் நாம் காணலாம்.

சில சமயங்களில் நீங்களும், நானும் அற்பமானவர்களாக உணரக் கூடும். நட்சத்திரங்கள் நிரம்பிய அண்டசராசரங்களிலே நாம் ஒரு குட்டி நட்சத்திரம். ஒருவருமே நம்மைக் கண்டு கொள்ளுவதில்லை என சில நேரங்களில் நாம் உணரக்கூடும். ஆனால் தேவன் நம்மை வெகு அருகாமையில் பார்க்கின்றார். நம்மைச் சுற்றி ஆயிரக்கணக்கானோர் இருந்தாலும் தேவன் நம்மை அருகாமையிலே பார்க்கும்படியாக அவரிடம் தொலைநோக்கி கருவி ஒன்று அவசியம் உண்டு. ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலிருப்பதை அவரால் உணர முடியும்.





வார்த்தைகளை சைகை மொழியால் பேசி கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்குக் கொடுத்து, புதிருக்கு விடையை கண்டுபிடிக்க உதவுங்கள்.


#### குழந்தை

கைகளை மடித்து குறுக்காக வைத்து ஆட்டுங்கள்.




#### குடும்பம்

பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் தொட்டு கைகள் தொடும்படியாக வெளிப்புறமாக வட்டமிடுங்கள்.




#### அச்சம் / பயப்படுவது

விரல் நுனிகளால் தொட்டு, திறந்த கைகளால் நெஞ்சை மூடுங்கள்.



## தகவல் விளையாட்டு



"தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்"

இந்தப் பாடத்தின்போது, "தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்" என்ற சொற்றொடரை மாணவர்கள் ஒவ்வொரு முறை கேட்கும்போதும், அவர்கள் "ஆண்டவரே எனக்கு உதவும்" என்று பதில் கூறி, தேவனை நோக்கி தங்கள் கைகளை உயர்த்தி குதிப்பார்கள்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

## கூடைக்குள் மோசே

கொடுக்கப்பட்டவை:
ஆயத்தமாக்கப்பட்ட படம் (அச்சிட்டு, வெட்டியெடுத்து, ஒட்டை போடுங்கள்).

கிரேயான்ஸ் (அல்லது கலர் பென்சில், மார்க்கர் அல்லது பெயிண்ட்)



செயல்முறை விளக்கங்கள்:
1. மாணவர்கள் பின்புறமாக தங்கள் பெயரை எழுதி, முன்புறத்தில் வர்ணம் பூச வேண்டும்.

2. மாணவர்கள் துளையின் ஊடாக கயிற்றை விட்டுக் கட்ட வேண்டும்.

விளையாட்டுகள் மற்றும் முடிவிற்காக பாலத்திற்கு மீண்டும் செல்லுதல்

## ஒரு வார்த்தையை உண்டாக்குவது

ஒவ்வொரு குழுவிலிருந்து 3 சிறுவர்களைத் தேர்வு செய்து அவர்கள் மேடையின் மீது நிற்க வேண்டும். பின் தங்களுடைய உடல் அசைவினால் கொடுக்கப்பட்ட 3 எழுத்து வார்த்தையை வெளிப்படுத்த வேண்டும். இந்த விளையாட்டை பல முறைகள் ஆடலாம். ஒவ்வொரு குழுவும் நேரத்திற்கு எதிராக போட்டி போட வேண்டும். தலைவர் ஆரம்பியுங்கள் என்று சொன்னவுடனே, தலைவர் முதல் வார்த்தையை ஒரு குழுவினருக்கு கிசுகிசுக்க, அவர்கள் எதுவும் பேசாமல் அந்த வார்த்தையை தங்களுடைய உடம்பைக் கொண்டு உருவாக்குவார்கள். அந்தக் குழுவில் இருப்பவர்கள் மாத்திரம் யூகிப்பார்கள். அது சரியாக இருந்தால், கடிகாரம் நிறுத்தப்படும், சரியான வார்த்தையை யூகிப்பதற்கு எத்தனை வினாடிகள் ஆனது என தலைவர் குறித்துக் கொள்ளுவார். உங்களுடைய குழுக்கள், சிறுவர்களுக்கு எதிராக சிறுமிகள் என்றால், உதாரணத்திற்கு சிறுமிகளுக்கு ஒரு வார்த்தை கொடுக்கப்படும். மேடையின்மேல் உள்ள 3 சிறுமிகள் தங்களது உடலைக் கொண்டு அந்த வார்த்தையை உருவாக்குவார்கள். அவையில் உள்ள சிறுமிகள் அந்த வார்த்தை எதுவாயிருக்கும் என யூகித்து சத்தமிடுவார்கள். சிறுவர்களும் கலந்து கொள்ளுவார்களெனில், சிறுமிகள் ஜெயிப்பதற்கு அவர்கள் உதவுவார்கள். குறிப்பிட்ட சில மூன்று எழுத்து வார்த்தைகள்: நாய், பூனை, காற்று, பந்து, பன்றி, வண்டி, போன்றவை.

## ருசி பார்க்கும் திறன்

ஒவ்வொரு குழுவிலிருந்து ஒரு சிறு பிள்ளையை மேடையின்மீது அழையுங்கள். வித்தியாசமான உணவுகளை, வித்தியாசமான சுவையுடன், மாறுபட்ட தன்மையோடு தயார் செய்யுங்கள். அந்த உணவை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்து வையுங்கள். மேடைமீது வரும் இரண்டு சிறுவர்களின் கண்களையும் கட்டி விடுங்கள். சிறுவர்கள் ஒவ்வொன்றையும் ருசி பார்த்து அது என்ன என்று கண்டுபிடிக்குமாறு ஒரு சமயத்தில் ஒரு உணவை மட்டும் மேடை மீது கொண்டு வாருங்கள். மற்ற மாணவர்கள் தாங்கள் காணுகின்றது என்ன என்பதைக் கூறாமல் அந்த விளையாட்டை இன்னும் அதிக சவால் உள்ள போட்டியாக்குங்கள். (உங்கள் வகுப்பு சிறுவர்கள் பதிலைக் கூறாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்!) ஒவ்வொரு சிறுவரும் ஒரு பதிலைக் கூற ஒரு தருணம் மட்டுமே கொடுக்கப்படும். முடிவான பதிலை தெரிவிக்க 10 வினாடிகள் மாத்திரம் அவர்களுக்குக் கொடுங்கள். ஒருவேளை குளறுபடியினால் ஏற்படக்கூடிய ஏதாவது அழுக்காக்கும் நிலை ஏற்படலாம். எனவே சுத்தம் செய்வதற்கு தயாராக சிறு கைத்துணிகள் அல்லது துடைப்புக் குட்டைகளை வைத்திருங்கள். வித்தியாசமான உணவுகளை ருசி பார்த்து யூகிக்க மேடை மீதுள்ள மாணவர்கள் எல்லோருக்கும் வரிசையாக தருணத்தைக் கொடுங்கள். அதிகமான உணவை சரியாக கண்டுபிடிக்கும் குழுவே வெற்றி பெற்றதாகும்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil


# 2 இரண்டாம் பயணம்

# தேவனுக்கு பதில் கொடு!



விண்வெளி துறைமுகம்:

மெகான்டாரஸ்









## உயர எழும்பு

துவக்க நாடகம்

இன்றைக்கு கேப்டனுக்கு பதிலளிப்பதற்கு ரோபோட்டுக்கு மிகுந்த பிரச்சினையாக இருக்கிறது. அவனுக்கு காது கேட்காதது போல் தெரிகின்றது. கேப்டன் ரோபோட்டிற்கு ஹலோ சொல்லி விண்வெளிக் கப்பலை இயக்குவதற்கு தயாராகிறான். ஆனால் ரோபோ முழுவதுமாக அவனை உதாசீனப்படுத்துவது போன்று நாடகப் பகுதியை ஆரம்பிக்கவும். அவர்கள் பேச்சு பரிமாறிக் கொள்ள சிரமப்படுவதால் ரோபோட்டுக்கும் கூடியிருப்பவர்களுக்கும் அந்த நாளின் பதிலுரையைக் கேப்டன் கற்றுக் கொடுக்கிறான்.

இந்தப் பாடத்தில் மாணவர்கள் “தேவனுக்கு பதில் கொடு” என்று கேட்கும் ஒவ்வொரு நேரத்திலும் “ஆம் ஆண்டவரே! என்று சொல்ல வேண்டும். அப்போது தங்கள் கையை காதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு “நான் இங்கே இருக்கிறேன்!” என்று சொல்லும்போது ஒரு போர்ச்சேவகனைப் போல் தங்கள் கால்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். வியக்கத்தக்க வகையில் மிகப் பெரியதும், வானத்தில் 15 வது ஒளிமிக்க நட்சத்திரமுமாகிய அன்டேர்ஸ் (Antares) இடத்துக்கு இன்று அவர்கள் பயணம் செய்து கொண்டிருப்பார்கள் என்று கேப்டன் பகிர்ந்து கொள்ளுகிறார். மெகன்டேர்ஸ் (Megantares) என்கின்ற விண்வெளி நிலையத்தில் அவர்கள் இறங்கி சர்வலோகம் எவ்வளவு பெரியது என்பதைப் பார்ப்பார்கள்!



## தகவல் விளையாட்டு

“தேவனுக்குப் பதில் கொடு!”

இந்தப் பாடத்தில் மாணவர்கள் “தேவனுக்குப் பதில் கொடு” என்று கேட்கும் ஒவ்வொரு நேரத்திலும் “ஆம் ஆண்டவரே!” என்று சொல்ல வேண்டும். அப்போது தங்கள் கையை காதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு “நான் இங்கே இருக்கின்றேன்!” என்று சொல்லும் போது ஒரு போர்ச்சேவகனைப்போல தங்கள் கால்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(கருப்பாடலைப் பாடவும். பிறகு உயர எழும்பும் ஓசையுடன் விண்கலம் புறப்படும்)
பயணம் செய்து கொண்டிருக்கும்போது அவர்கள் சேருமிடம் செல்வதற்காக விண்மீன்களின் கூட்டமான பால் மண்டலத்தை (இடையூறு இல்லாத வழி போன்றது) அவர்கள் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று கேப்டன் ரோபோட்டுக்குக் கூறினான். ரோபோட் அதைச் சரியாகக் கேட்கவில்லை. ஆகவே பால் மண்டல நுழை வாசலை அவர்கள் தவற விட்டுவிட்டு அடுத்த ஒன்றுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. ரோபோட்டுக்கு கேப்டன் எண்ணெய் போட்டான். அவன் கேப்டனுக்கு பதிலளிக்க ஆரம்பித்தான். (“தேவனுக்கு பதில் கொடு”, “ஆம் ஆண்டவரே, நான் இங்கே இருக்கின்றேன்” என்கின்ற சொற்றொடர்களை இங்கே பலமுறை பயன்படுத்தவும்).

வேதாகமத்திலிருந்து விண்வெளி வீரர் பயிற்சிக்கு சரியான நேரத்தில் அவர்கள் சேர்ந்தார்கள்! (தரையிறங்கியபின் பார்வையாளரோடு விளையாட்டு செய்து முக்கியமான பாடத்துக்குச் செல்லுவோம்).



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil




## கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி

(முக்கிய பாடம்)

### மோசேயும் எரிகின்ற முட்செடியும்

இப்போது மோசே, தன்னுடைய மாமன் எத்திரோவின் மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தான். அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்ததை மோசே பார்த்தான். “இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன்” என்று மோசே நினைத்தான்.
அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டபோது, முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி “மோசே! மோசே!” என்று கூப்பிட்டார். மோசே “இங்கே இருக்கிறேன்!” என்றான்.
“இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு. நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி” என்றார். பின்னும் அவர் “நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனுமாயிருக்கிறேன்” என்றார். மோசே தேவனை நோக்கிப் பார்க்க பயந்ததினால் தன் முகத்தை மூடிக்கொண்டான். (யாத்திராகமம் 3:1-6)



## விண்வெளி கண்டுபிடிப்பு

தேவன்

**வியக்கத்தக்கவர்**



## தகவல்...

வேதாகம வசனம்.

“யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற தேவனுடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.” ஏசாயா 6:8

மோசேயிடம் பேசுவதற்கு தம்மை வெளிப்படுத்திய தேவன் எவ்வளவு வியப்புக்குரியவர்!!! தேவன் மோசேயை அழைத்தார். அவருக்கு அவனுடைய பெயரும் தெரியும்! தேவன் நம்மை அழைக்கும்போது நாம் என்ன செய்ய முடியும் என்பதை இன்றைக்கு நாம் கற்றுக் கொள்ளுகிறோம்... தேவனுக்கு பதில் கொடு!
ஆடுகளை மேய்த்துக் கொண்டு மோசே தன் சொந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். மோசே ஜெபித்துக் கொண்டோ அல்லது ஏதாவது ஆன்மீகக் காரியத்தைச் செய்து கொண்டோ இல்லை. அவன் வேலை செய்து கொண்டிருந்தபோது தேவன் அவனைக் கூப்பிட்டார். “ஹேய், அங்கேயிருக்கின்ற உன்னை” என்று அவர் கூறவில்லை. ஆனால் மோசேயைப் பெயர் சொல்லி அழைத்தார்! திடீரென்று “மோசே, மோசே” என்று யாரோ தன்னை அழைப்பதை மோசே கேட்க முடிந்தது. தன்னை அழைப்பது யாரென்று பார்ப்பதற்காக அவன் சுற்றிலும் பார்த்திருக்க வேண்டும். அவனைச் சுற்றி ஒருவரும் இல்லை. அவன் தனியாக இருந்தான். பின் அவன் தீயில் ஒரு முட்செடியைப் பார்த்தான்!!! அவனுடைய கையிலிருந்து தீயணைப்பான் எதையாவது எடுத்து தீயை அணைக்க ஆரம்பித்தான் என்று நினைக்கிறீர்களா? முட்செடி வெந்து போகவில்லை என்பதை அவன் கவனித்து எதையோ செய்ய அருகில் ஓடினான். அது தீயில் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் வெந்து போகவில்லை! பின் அந்த முட்செடி அவனோடு பேச ஆரம்பித்தது. “நான் தேவனுக்கு பதில் கொடுக்க வேண்டுமா?” என்று மோசே நினைத்திருக்க வேண்டும்.
நீங்களும் நானும் சாதாரணமாக எரிகின்ற முட்செடியைப் பார்ப்பதில்லை; நன்கு கேட்கும் தொனியில் தேவன் நம்முடன் பொதுவாகப் பேசுவதில்லை. ஆனால் நம் அனைவரோடும் தொடர்பு கொள்ளுவதற்கு தேவன் முயற்சி செய்கின்றார். உங்களுடன் பேசவும், நேரம் செலவிடவும் அல்லது உங்களுக்கு வழிகாட்டவும் தேவன் எப்பொழுதும் முயற்சி செய்கின்றார். காரியம் என்னவென்றால், நம்மில் ஒரு சிலரே அவர் சொல்வதைக் கேட்கின்றோம். அநேகர் நாள் முழுவதும் அவரை உதாசீனம் செய்துவிட்டு சுற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர் இருக்கின்றார் அல்லது அவர் நம்முடன் பேசுவதற்கு விரும்புகின்றார் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர்! நீங்கள் தேவனுக்கு பதில் கொடுக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார், நம்முடைய தேவன் வியப்புக்குரியவரில்லையா?
நாம் இன்று செய்வது போல தேவனை உதாசீனம் பண்ண மோசே தெரிவு செய்திருக்கலாம். ஆனால் அவன் நின்று, செவி கொடுத்தான். பிறகு பதில் கொடுக்க அவனுடைய இருதயத்தையும் வாயையும் திறந்தான். “ஆம் ஆண்டவரே நான் இங்கே இருக்கிறேன்” என்று சொற்றொடரால் தேவனுக்குப் பதில் கொடுத்தான். அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிக்கின்ற திட்டம் தேவனுக்கு இருந்தது. அவர் மோசேயைப் பயன்படுத்த விரும்பினார். அந்த எளிய சொற்றோடரைப் பேசி, “நான் இங்கே இருக்கிறேன்” என்கிற தேவனுடைய அழைப்புக்கு மோசே பதிலளித்தான். உங்கள் வாழ்க்கையிலும்கூட தேவன் ஆச்சரியமான காரியங்களைச் செய்ய விரும்புகின்றார். உங்களுக்காக பெரிய, வியத்தகு திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார். ஆனால் நீங்கள் நின்று அவருக்குச் செவி கொடுப்பதை அவர் விரும்புகின்றார். நீங்கள் தேவனுக்கு பதில் கொடுக்க அவர் விரும்புகின்றார்!



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

## சாப்பாட்டு அறை

### சிற்றுண்டி

### மோசேயின் எரிகின்ற முட்செடி

ப்ரோகோலி (Broccoli) பசுமையான புதர்போல இருக்கும். மோசே பார்த்த எரிகின்ற புதருக்காக அதைக் காட்டலாம்.

காலிஃப்ளவர் (Cauliflower) சிறிய மரம் போலத் தோன்றும். தீச்சுடர் போலத் தோன்றுவதற்கு அதை தக்காளி ketchup அல்லது மிளகாய் சாசுடன் முக்கி தீ போன்று காட்சி அளிக்கும்!







### கருத்துரை

(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசிக்கலாம்).

### ஆச்சரியமான அளவு பெரியது.

தேவன் நம் பெயரை அறிந்திருப்பதினால், நம்மை நேசிப்பதினால் இந்த சர்வலோகத்தில் நாம் மிகவும் முக்கியம் என்றும் மிகவும் பெரியவர்கள் போன்றும் நாம் உணரலாம். வீனஸ் (வெள்ளிக் கோள்), மார்ஸ் (செவ்வாய்க் கோள்), மெர்குரி (புதன் கோள்), புளூட்டோ போன்ற சிறிய கிரகங்களோடு பூமியை ஒப்பிடும்போது பூமி பெரியதாக இருப்பதுபோல, (போஸ்டர் 2 ஐக் காட்டவும்). ஆனால் பூமியை ஜூபிடர் (வியாழக்கோள்), சேட்ர்ன் (சனிக்கிரகம்), யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய பெரிய கிரகங்களோடு ஒப்பிடும்போது அது சிறியதாக இருக்கும். (போஸ்டர் 3 ஐக் காட்டவும்). சர்வலோகத்தின் மற்றப் படங்களைப் பார்க்கவும். (போஸ்டர்கள் 4, 5, 6 ஆகியவைகளைக் காட்டவும்). இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தில் தேவன் உன்னைக் கண்டுபிடிக்க முடியும். அவருக்கு உன் பெயர் தெரியும். ஆனால் அவர் உன்னை அழைக்கும்போது நீ இன்னும் பதில் பேச வேண்டியவனாயிருக்கின்றாய். நீ மிகவும் முக்கியம் என்று நீ கருதலாம். ஆனால் சர்வலோகத்தில் உள்ளபடியே நீ மிக, மிக, மிகச் சிறியவன்.


## பயிற்சி வகுப்பு



வார்த்தைகளை சைகை மொழியால் பேசி கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்குக் கொடுத்து, புதிருக்கு விடையை கண்டுபிடிக்க உதவுங்கள்.

### தேவதூதன்

தோள்களின்மேல் விரல் நுனிகள் வைத்து, எடுத்து மேலும் கீழும் அசைவாட்டவும்.







### மோசே

இரண்டு கைகளிலுமுள்ள பெருவிரல், ஆள்காட்டி விரல் ஆகியவைகளை நெற்றிப் பொட்டில் வைக்கவும்; கைகளை பக்கவாட்டில் அசையப்பண்ணும்போது விரல்களை மூடவும்.

### கவனி

வலது காது மூடி; தலையை இடப்புறம் திருப்பு.







## எரிகின்ற முட்புதர்

கொடுக்க வேண்டிய பொருட்கள்:
ஒவ்வொரு மாணவனுக்கும் படத்தின் நகல்.
மிகச் சிறிதாக வெட்டிய திசு பேப்பர் (Tissue paper)
கிரேயான்



வழிமுறைகள்:-
1. புதரை நகல்கள் எடுக்கவும் அல்லது சிறுவர்கள் தாங்களே வரைய அனுமதிக்கவும்.
2. கிளைகளை பழுப்பு நிறத்தில் வர்ணம் தீட்டவும்.
3. குச்சி, கிரேயான் அல்லது பென்சிலைச் சுற்றி திசு பேப்பரைச் கோந்தின் உதவியுடன் படத்தில் இலைகள் அக்கினி ஆகியவைகளைச் செய்யவும்.
4. சிறுவர்கள் தங்களுடைய படங்களில் பாறைகள், பாலைவனம், குன்றுகள், சூரியன், மேகங்கள் போன்ற வைகளையும் வரையலாம். உங்களுக்கு நேரமிருந்தால் மாணவர்கள் தாங்களே சிலவற்றை உண்டாக்கலாம்.

விளையாட்டுகள் மற்றும்
முடிவிற்காக பாலத்திற்கு மீண்டும் செல்லுதல்




## குடிக்கின்ற ரீலே ஓட்டப்பந்தயம்

ஒவ்வொரு குழுவிலும் 3 சிறுவர்கள் வரிசையாக நிற்க வேண்டும். அறையின் இன்னொரு முனையில் ஒரு மேஜையில் ஒவ்வொரு குழுவுக்கும் தண்ணீர் வைக்க வேண்டும். ஓடுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு உறிஞ்சி (straw) கொடுக்க வேண்டும். சிறுவர்கள் மேஜைக்கு ஓடி அங்கே தலைவர் விசில் ஊதும்வரை உறிஞ்சியை வைத்து தண்ணீர் குடிக்க வேண்டும். பின்திரும்பி ஓடி வரவேண்டும். அந்தக் குழுவின் அடுத்த சிறுவர் ஓடி தண்ணீர் குடிப்பது தொடர வேண்டும். நேரம் முடியும்போது மேஜையில் தண்ணீர் குறைவாக உள்ள குழு வெற்றி பெற்றதாகக் கருதப்படும் (அல்லது யார் முதலில் தண்ணீரைக் குடித்து முடிக்கின்றார்களோ அவர்கள் வெற்றி பெற்றவர்கள்).

## வாழைப்பழம் சாப்பிடும் போட்டி

ஒரு குழுவுக்கு ஒரு சிறுவரைத் தெரிந்தெடுக்கவும். வாழைப்பழத்தை உரித்து சாப்பிட வேண்டும். பிரச்சினை என்னவெனில் சிறுவர்களின் ஒரு கை அதின் முதுகுக்குப் பின்னால் இருக்க வேண்டும். தலைவர் 'போ' என்று சொன்னதும் சிறுவர்கள் ஒரு கையையும் தங்கள் பற்களையும் உபயோகித்து வாழைப்பழத்தை உரிக்க வேண்டும். உரித்தவுடன் வெற்றி பெறுவதற்கு முழு பழத்தையும் சாப்பிட்டு முடிக்க வேண்டும்.




www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# 3 மூன்றாம் பயணம்


## தேவனுக்கு கீழ்ப்படி!



விண்வெளி துறைமுகம்:
வெலாஸி நட்சத்திரம்









## உயர எழும்பு

துவக்க நாடகம்

நேற்று இரவு ரோபோ போதுமான அளவு தூங்காததினால் இன்று குறை கூறிக்கொண்டேயிருக்கிறான்; அவன் கொஞ்சம் தூங்க விரும்புகிறான். புறப்படுவதற்கு ஆயத்தாகும்படி கேப்டன் கேட்டுக் கொள்ளும் ஒவ்வொரு சமயத்திலும் ரோபோவுக்குக் கீழ்ப்படிய மனதில்லை, அவன் சலிப்பாகக் காணப்பட்டான். அவன் கீழ்ப்படியாததினால் அவர்கள் கஷ்டப்படுவதால் அந்த நாளுக்குரிய சொற்றொடர் ‘தேவனுக்குக் கீழ்ப்படி’ என்கிற பதிலை சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். சிறுவர்கள் கற்றுக்கொள்ள குதித்து, நடக்க ஆரம்பித்து “நான் போய்க் கொண்டிருக்க வேண்டும்” என்று கூறி யாருடனாவது நாற்காலியை மாற்றிக் கொள்ளுகின்றனர்! சிறுவர்கள் தங்கள் நாற்காலியை மாற்றிக் கொண்டேயிருந்து, தங்கள் கால்விரல் நுனியில் நின்றுகொண்டு, “தேவனுக்குக் கீழ்ப்படி” என்கின்ற வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இன்றைய பாடத்தின் கருத்து.

ஆரம்பத்தில் ரோபோ சரியாகச் செய்யவில்லை. பேச்சு சத்தத்துக்கும் மேலாக தெளிவில்லாத சத்தங்கள் கேட்டது. ஆனால் அவனை எழுப்புவதற்காக கேப்டன் ஒரு பெரிய கோகோ கோலா கொடுக்கின்றான் (ஒரு பெரிய கோக் அல்லது காபியை அட்டையில் செய்யவும்.) இப்பொழுது ஒரு விரைவு விண்கலத்தைவிட அல்லது ஒரு வால் நட்சத்திரத்தைவிட அல்லது வெளிச்சத்தின் வேகத்தைவிட எல்லா இடத்துக்கும் சென்று கொண்டிருந்தான்!



## தகவல் விளையாட்டு

“தேவனுக்குக் கீழ்ப்படி!”

பாடத்தின்போது “தேவனுக்குக் கீழ்ப்படி” என்று சிறுவர்கள் கேட்கின்ற ஒவ்வொரு சமயத்திலும் சிறுவர்கள் நிற்கும்போதும், சுற்றி நடக்கும்போதும் இன்னொரு சிறுவனுடன் இருக்கைகளை மாற்றிக் கொள்ளும்போதும் “நான் போய்க் கொண்டிருக்க வேண்டும்” என்று மாணவர்கள் பதில் சொல்லட்டும்.

கருப்பாடலை பாடி விண்வெளிக்குள் செல்லவும். இப்பொழுது ரோபோவுக்கு எங்கு செல்கின்றனர் என்று தெரியவில்லை. எனவே கேப்டன் அவனுக்குச் சொல்லுகின்றான். மிகச் சமீபத்திலிருக்கும் நட்சத்திரத்துக்கு அவர்கள் செல்வார்கள்; அசைவுகளைப் பற்றி அவர்கள் கற்றுக்கொள்ள ‘வெலோசிஸ்டார்’ (Velocistar) விண்வெளி நிலையத்தில் இறங்குவார்கள். (எல்லா நேரத்திலும் ரோபோ எல்லா இடங்களுக்கும் போய் வந்து கொண்டிருக்கின்றான்.)

மொத்த வாரத்திலும் இது சிறிது தூர பயணமாயிருக்கும்படி (ஏனெனில் அருகாமை நட்சத்திரத்தை நாம் போய்ப் பார்க்கின்றோம்.) அவர்கள் விரைவாகத் தரையிறங்கட்டும். பிறகு பாடத்துக்குள் செல்லவும். தரையிரங்கியவுடன் அவர்கள் வெளியேறும்போது ரோபோவை கேப்டன் துரத்த ரோபோ பயித்தம்போல் சுற்றி ஓடட்டும்.

## தகவல்...



வேதாகம வசனம்.

“அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.” 1 யோவான் 3:24





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



## கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி

(முக்கிய பாடம்) **எகிப்தின் வாதைகள்**



**விண்வெளி கண்டுபிடிப்பு**

தேவன்

**அற்புதமானவர்**

"இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்கிற ஒடுக்குதலையும் கண்டேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்"... "ஆதலால் நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார். அதற்கு அவன், ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்." அப்பொழுது கர்த்தர் மோசேயின்மேல் கோபம் மூண்டவரானார்... பின், மோசே தன் மாமனாகிய எத்திரோவினிடத்துக்கு வந்து, "நான் எகிப்திலிருக்கிற என் சகோதரரிடத்துக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னும் உயிரோடே இருக்கிறார்களா என்று பார்க்கும்படி" போக வேண்டும் என்றான். (யாத்திராகமம் 3:9-10; 4:12-18).

கீழ்ப்படிகிறது மிகவும் கடினமான காரியம். யாரும் கீழ்ப்படிய விரும்புவதில்லை. தாங்கள் செய்வதை நிறுத்திவிட்டு இன்னொருவருக்குக் கீழ்படிய எவரும் விரும்புவதில்லை. குறிப்பாக தேவனுக்கு கீழ்ப்படிவது மிகவும் கடினமாயிருக்கும். ஏனெனில் உள்ளபடியே நாம் அவரைப் பார்க்க முடியாது. எனவே நாம் அவர் இல்லையென்று பாசாங்கு செய்ய முயற்சித்து, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று நினைக்கின்றோம்; ஒவ்வொருவரும் அவரவருடைய சொந்த வேலையைச் செய்ய விரும்புகின்றனர். உங்கள் பெற்றோருக்கு நீங்கள் கீழ்ப்படியவில்லையென்றால், என்னவாயிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் தனியாக இல்லை! மனிதகுலம் முழுமையும் இந்த மாதிரியே பிறந்திருக்கின்றது. நாம் நினைத்துக் கொள்ளுகின்றபடி நாம் இனிமையான சிறிய படைப்புகளாகப் பிறக்கவில்லை. முழு உலகமும் நம்மைச் சுற்றி சுழல்வதாக நினைத்துக் கொண்டு தன்னலமுள்ளவர்களாகப் பிறந்திருக்கின்றோம். சில நேரங்களில் நமக்கு நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தெரியும். ஆனால் கீழ்ப்படிய நாம் விரும்பவில்லை. நாம் அதைவிட்டு வெளியேற ஆரம்பிக்கின்றோம். சரி, அதுதான் மோசேயும் செய்தது.

தம்முடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் விடுவிப்பதற்கு தேவன் அருமையான ஒரு திட்டம் வைத்திருந்தார். தம்முடைய மக்களை விடுவிக்கின்ற அதே நேரத்தில் தம்முடைய மகிமையையும் மகத்துவத்தையும் காண்பிக்க விரும்பினார். வாதைகளைப் பயன்படுத்த விரும்பினார். எகிப்தியர்கள் அவருடைய மக்களைப் போக விடுகின்ற வரையில் தேவன் வெற்றிபெற விடுகின்ற வரையில் வாதைகள் ஒன்றைவிட அடுத்தது மிகவும் மோசமானதாக இருந்தது. பார்வோனிடம் மோசே பேச வேண்டும் என்று தேவன் விரும்பினார். மோசே தேவனுடைய ஆள். ஆனால் மோசே கீழ்ப்படிய விரும்பவில்லை. மோசே போக விரும்பவில்லை.

தான் நன்றாகப் பேசத் தெரியாதவன் என்றும், வேறு ஒரு சிறந்த ஆளை தேவன் கண்டுபிடிக்க முடியும் என்று மோசே கெஞ்சினான். யாராவது இன்னொருவரை அனுப்பும்படி மோசே தேவனைக் கேட்டுக் கொண்டான்!! உங்களை எங்கேயாவது அனுப்ப வேண்டாம் அல்லது எதையாவது செய்யச் சொல்ல வேண்டாம் என்று உங்கள் தாயாரிடம் நீங்கள் கெஞ்சியிருக்கிறீர்களா? அப்படியானால் மோசே எப்படியாக உணர்ந்தார் என்று உங்களுக்குத் தெரியும். தேவனுக்குப் பெரிய திட்டமிருந்தது. மோசே தேவனுக்குக் கீழ்ப்படிவது மோசேக்கு முக்கியமாயிருந்தது. மோசே செய்து கொண்டிருந்த அங்கலாய்ப்புகள் தேவனுக்கு களைப்பாயிருந்தது. அவன்மேல் தேவன் கோபமடைந்தார் என்று வேதாகமம் கூறுகின்றது! மோசேக்கு உதவி செய்வதற்கு, அவனோடு இன்னொரு ஆள் செல்வதற்கு தேவன் அனுமதித்தார். மோசே என்ன செய்தான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அது சரிதான், இறுதியில் அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான்!

மோசேயின் கோல் ஒரு சர்ப்பமாகியது, பின் திரும்பவும் ஒரு கோலாக்கியதிலிருந்து ஆரம்பித்து தேவன் தம்முடைய மகிமையையும் அற்புதத்தையும் காண்பித்தார். தேவனுடைய மக்களை அனுப்பிட பார்வோன் மறுத்தான். எனவே தேவன் வாதைகளை ஆரம்பித்தார். ஒவ்வொரு முறையும் பார்வோன் மனம் வருந்துவதற்கு தேவன் வாய்ப்பளித்தார். ஆனால் பார்வோன் மனம் வருந்தவில்லை. தேவன் வாதைகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பினார். இரத்தம், தவளைகள், பேன்கள், வண்டு ஜாதிகள், மிருக ஜீவன்களின் மரணம், கொப்பளங்கள், கல்மழை, வெட்டுக்கிளிகள், காரிருள் மற்றும் முதற்பேறானவைகளின் மரணம். இவைகளெல்லாவற்றுக்குப் பின் பார்வோன் இறுதியில் விட்டுவிட்டான்; தேவன் வெற்றி கொள்ள விட்டான்! தேவனுடைய மக்கள் அங்கிருந்து விட்டுச் செல்வதற்கு விடுதலையானார்கள். தேவனுடைய மகிமையை அவர்கள் கண்டார்கள்!


மோசே அங்கலாய்ப்பை விட்டுவிட விருப்பமானார், எழுந்து போனார்; தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். எனவே இவைகளெல்லாம் நிறைவேறியது.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

சாப்பாட்டு அறை

## வாதைகள்





## கருத்துரை

### சிற்றுண்டி

பல்வேறு பொருட்களை வைத்து ஒரு தவளையை செய்வது எவ்வாறு என்று சிறுவர்களுக்குக் காட்டவும். உடலுக்கு சிறிய ஆப்பிள் அல்லது ரொட்டித் துண்டை பயன்படுத்துங்கள். பச்சை திராட்சை, கீரைத்தண்டு வகைகள் கால்களாகலாம். கல்கண்டு, உலர்ந்த திராட்சை, சிறிய ரொட்டி துண்டின்மேல் சாக்லெட் துண்டுகள் கண்களாகலாம். சிம்புகளாகப் பிளக்கப்பட்ட கேரட் துண்டுகள் நாக்கு போலாகலாம். அதிக வேடிக்கைக்குப் பிள்ளைகள் சொந்தமாக தவளைகள் செய்யட்டும்.

விருப்பமானால் செய்யக்கூடியவை: தண்ணீர் இரத்தமாக மாறுவதற்கு சிவப்பு நிறத்திலுள்ள பருகும் பானத் தூள்களை முதலிலேயே கருப்பாக இருக்கும் ஒரு பாத்திரத்தின் அடிப்பாகத்தில் போட்டுவிட வேண்டும். மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது தெளிவான பாட்டிலிருந்து சுத்தமான தண்ணீரை அதற்குள் ஊற்ற வேண்டும். அதைக் கலக்கும்போது அது இரத்தமாக மாறும்.

(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசிக்கலாம்).

### நகர்வு

பிரபஞ்சத்தில் தேவன் நகர்வைக் கட்டளையிட்டார். பூமி ஒரு அச்சில் சுழலும் என்றும் சூரியனைச் சுற்றி வரும் என்றும் தேவன் ஆரம்பத்திலேயே திட்டமிட்டார். ஆனால் தரையிலிருந்து நான் நகர்வதாகத் தெரிவதேயில்லை. (சிறுவர்களை ஒரு வட்டத்தை சுழன்று வரச்சொல்லி அப்படியே வகுப்பறையின் இன்னொரு பக்கத்துக்கு நடக்கச் சொல்லுங்கள்.) பூமி சுழன்றும் சுற்றியும் இருந்து கொண்டிருந்தால் நாம் நடப்பது கடினமாக இருக்காதா? அண்டசராசரத்தில் தேவன் நகர்வை திட்டமிட்டது போல நம்முடைய வாழ்க்கைகளிலும் நகர்வைத் திட்டமிட்டார். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தில் செயல் பாடுகளுக்கான நடபடிகள், இடர்பாடுமிக்க சூழ் நிலைகளை எதிர்கொள்ளுவது, பாதை கடினமாகவோ பைத்தியக்காரத்தனமாகவோ தெரிகின்றதாயிருந்தாலும் தேவனுக்குக் கீழ்படிவதை அடங்கியிருக்கின்றன. உண்மையிலேயே, நகர்தல் இல்லையென்றால் சீக்கிரமாக நாம் சலிப்படைந்து, நம்மை மகிழ்விக்கின்ற மற்ற காரியங்களை நோக்கிப் பார்க்க ஆரம்பிக்கின்றோம். பூமி சுழன்று கொண்டே இருப்பதுபோல, நம்முடைய வாழ்க்கையில் தேவன் நம்மை இயக்கிக் கொண்டே இருப்பார். நம்முடைய பதில் “ஆம் ஆண்டவரே” என்பதும் நகர்த்தலுமாயிருக்க வேண்டும்.



## பயிற்சி வகுப்பு



வார்த்தைகளை சைகை மொழியால் பேசி கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்குக் கொடுத்து, புதிருக்கு விடையை கண்டுபிடிக்க உதவுங்கள்.


### காப்பாற்று

திறந்த குறுக்கான கரங்கள்



### சேர்ந்திருப்பது

கையின் முட்டிகளைத் தொடு



### தேவன்

வலது ஆள்காட்டி விரலை சுட்டிக்காட்டு. கையைத் தாழ்த்தி மார்பில் கையை உயர்த்தித் திற.



### விலகிப் போ

மூடிக்கொண்டே வலது கை நகர்கின்றது.





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

பொறியியல்

## உன் காலணிகளைக் கழற்று

பொருட்கள்:
தாள், நூல் அல்லது கயிறு, ஒவ்வொரு சிறுவருக்கும் இரண்டு; துளை செய்கின்ற கருவி; கத்தரிக்கோல், பென்சில், பேனா அல்லது மார்க்கர்.



செயல்முறை விளக்கங்கள்:

1. சிறுவர்கள் பாதத்தை தாளில் அல்லது நுரை போன்ற ரப்பரில் (foamy) வரையவும். (சிறுவர்கள் ஒருவர் பாதத்தை ஒருவர் வரையலாம்).

2. காலணி வடிவில் வெட்டிக் கொண்டு, கயிறு (lace) கட்டுவதற்கு துளையிடவும்.

3. ஒவ்வொரு சிறுவருக்கும், நூல் அல்லது கயிறு இரண்டு துண்டுகள் தரவும். காலணிகளைச் சிறுவர்கள் அவர்கள் பாதத்தோடு கட்டிக் கொள்ளலாம். கயிறு சரியாக இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டாம். சிறுவர்கள் காலணிக் கயிறுகளைக் கட்ட விரும்புவார்கள். விரல்கள் ஒருங்கிணைந்து வேலை செய்ய அது உதவும். வயதில் பெரிய சிறுவர்கள், நீளமான கயிறுகளைப் பயன்படுத்த விரும்புவார்கள்; அவர்கள் காலணிகளை சரியாகப் போட்டுக் கொள்ளுவார்கள்.

4. காலணியில், “ஆம் ஆண்டவரே, நான் இங்கே இருக்கிறேன்” என்று தேவனுக்கு பதில் சொல்வேன் என்று எழுதவும்.

விளையாட்டுகள் மற்றும் முடிவிற்காக பாலத்திற்கு மீண்டும் செல்லுதல்

## வேடிக்கையான ஒலிகள்

1. இருமல் 2. விக்கல் 3. வாந்தி 4. தும்மல் 5. கைதட்டல் 6. கொட்டாவி 7. ஏளனச் சிரிப்பு 8. கால் சத்தம் 9. தொண்டையை சரி செய்து கொள்வது.

6 விளையாட்டாளர்களை வரிசையில் நிறுத்தவும். ஒவ்வொரு குழுவிலிருந்தும் 3 பேர் இருக்கவும். அவர்கள் மாறி மாறி இருக்கட்டும். நீங்கள் செய்கின்ற ஒலிகளை அதே வரிசையில் விளையாடுபவர்களும் செய்ய வேண்டும் என்று முதலில் அறிவுறுத்தவும். பட்டியலில் உள்ள முதல் ஒலியை நீங்கள் எழுப்பவும். விளையாடுபவர்கள் எல்லாரும் தனித்தனியே அந்த ஒலியை சரியாக எழுப்புகின்றார்களா என்று வரிசையில் போய்ப் பார்க்க வேண்டும். அடுத்தது முதலாவது மற்றும் இரண்டாவது ஒலிகளை எழுப்பவும். அதை மற்ற எல்லாரும்கூட எழுப்ப வேண்டும். அடுத்து மூன்றாவது ஒலியைச் சேர்க்க வேண்டும். இப்படியே அடுத்தடுத்து செய்ய வேண்டும். விளையாடுகின்ற ஒருவர் ஒரு ஒலியை எழுப்ப முடியவில்லையென்றால் அல்லது ஒரு ஒலியை மறந்துவிட்டால் அல்லது சரியான வரிசைப்படி செய்யவில்லையென்றால் அவர் வெளியேறிவிட வேண்டும். ஒரே ஒருவர் தவிர மற்றவர்களெல்லாரும் வெளியேறும் வரை ஒலிகளைச் சேர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த ஒருவருடைய குழு வெற்றியடைந்த குழு!

## ஒட்டுகின்ற தலை

ஒவ்வொரு குழுவிலும் ஒருவருக்கு நெற்றியைச் சுற்றிலும் கன்னத்திலும் முகமூடி நாடாவை (masking tape) (ஒட்டும் பக்கம் இருக்க வேண்டும்.) சுற்றவும். சில காகிதத் துண்டுகளை மேஜையின்மேல் பரப்பி வைக்கவும். விளையாடுபவர்கள் மக்களைப் பார்த்து மேஜைக்குப்பின் நிற்க வேண்டும். தங்கள் கைகளை தங்கள் முதுகுக்குப்பின் வைத்துக் கொள்ள வேண்டும். “போ” என்று நீங்கள் சொன்னவுடன், விளையாடுபவர்கள் தங்கள் தலையை மேஜையின் மேல் உருட்டி முடிந்த அளவுக்கு காகிதத் துண்டுகளை ஒட்டிக் கொள்ள வேண்டும். ஒரு நிமிடத்தில் யார் அதிகக் காகிதத் துண்டுகளை ஒட்டியிருக்கின்றதோ அவர் வெற்றி பெறுகின்றார்.

(எந்த சிறுவர்களுக்காவது நீளமான தலைமுடி இருந்தால் நாடாவைக் கட்டும் முன் அதைப் பின்னே தள்ளிவிட வேண்டும். தலைமுடி இழுக்கும்போது வலிப்பதை இது தடுக்கும்.)





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# 4 நான்காம் பயணம்

## தேவனுக்கு காத்திரு!

விண்வெளி துறைமுகம்:
பிஸ்ரோ





### உயர எழும்பு

துவக்க நாடகம்




இன்றைய விபிஎஸ்-ஐ, இந்த நாள் பயணத்தில் எங்கு செல்வது என்று உரையாடி சண்டையிடும் ரோபோ, அதின் கேப்டன் ஆகியோருடன் தொடங்கவிருக்கிறோம். கேப்டன் தாங்கள் நிலவுக்குச் செல்ல வேண்டியதுள்ளது எனவும் ரோபோ வான்வெளி விண்கலத் தளத்திற்குச் செல்லவேண்டுமெனவும் கூறுகின்றனர். துரையை விட்டுக் கிளம்ப ஆயத்தம் செய்து கொண்டே இவ்வாறு சண்டையிட்டுக் கொள்கின்றனர். இந்த உரையாடலை பாடல்களுக்கு இடையேயும் தொடருங்கள். (ஒரு பாடல் பாடிவிட்டு மேடையில் அங்குமிங்கும் ஓடி அவர்கள் சண்டையிடவும். பின்னர் பிறிதொரு பாடலைப் பாடவும்)

கேப்டன் இன்றைய பாடத்தின் கருத்தினையும் மறு மொழியையும் இதன் மூலம் கற்பிக்கலாம்: “தேவனுக்குக் காத்திரு” என்று கேப்டன் கூறும்போது, சிறுவர்கள் குதித்து, ஒருவரை ஒருவர் தாக்கி சண்டையிட்டு, “நான் ஆயத்தம் தான்” என்று கூறி, தங்கள் கரங்களைக் கோர்த்து, அமர்ந்து “ஆனால் நான் காத்திருக்க வேண்டும்” என்று கூறுகின்றனர்.

ரோபோ தான் தவறு செய்துள்ளதை உணர்ந்து தனது கேப்டனிடம் மன்னிப்பு கேட்கிறான். செயற்கைக் கோள் தளம் செல்லும் யோசனை சிறந்ததுவே எனவும், ஆனால் இன்று விண்வெளி வீரர் ஏற்கெனவே நிலவிற்கு வந்து காத்திருப்பார்; ஆகையால் அடுத்த நாள் செயற்கைக் கோள் தளம் செல்லாம் எனவும் கூறகின்றார்.

இப்போது ரோபோவும், கேப்டனும் இன்று நிலவுக்கும், நாளை விண்கலத்தளத்திற்கும் செல்லலாம் என்ற நல்லதொரு தீர்வைக் கண்டுகொண்டபடியால் மகிழ்ச்சியுடன் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு நிலவுக்குச் செல்ல ஆயத்தம் செய்கின்றனர். வானத்தில் பறப்பதற்கு முன் ரோபோ தான் நிலவில் அணிவதற்கான தனது காலணியைத் தேடுகிறான்.


பனாஸா தளத்தில் எவ்வாறு இறங்க வேண்டும் எனவும், விண்கலம், காத்திருத்தல் ஆகியவனபற்றி கற்றுக் கொள்ளப் போவதாகக் கேப்டன் எடுத்துரைக்கின்றார். (இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளும்போது பயணத்தைத் துரிதப்படுத்தி நிலவில் இறங்கவும்)

### தகவல்...



வேதாகம வசனம்.

“கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்”
ஏசாயா 30:8ஆ



### தகவல் விளையாட்டு

“தேவனுக்குக் காத்திரு”

பாட வேளையில் “தேவனுக்குக் காத்திரு” என்ற சொற்றொடரை கேட்கும் போதெல்லாம் சிறுவர்கள் நான் ஆயத்தம் தான் என்று பதிலளித்து, குதித்து ஒருவரையொருவர் தாக்கி கொண்டே “ஆனால் நான் காத்திருக்க வேண்டும்” என்று கூறி, கைகளைக் கோர்த்துக் கொண்டு அமரவும்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



## கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி

(முக்கிய பாடம்)

### பகலில் மேக ஸ்தம்பமும் இரவில் அக்கினியும்

பார்வோன் இஸ்ரவேலரை நெருங்கி வரும்போது, அவர்கள் எட்டிப்பார்த்து, தங்களைத் தொடர்ந்து வரும் திரளான எகிப்தியரைக் கண்டனர். அவர்கள் பயந்து தேவனை நோக்கிக் கூப்பிட்டனர் . "எகிப்தில் பிரேதக்குழி இல்லையென்றா, நாங்கள் சாகும்படி இந்த வனாந்திரத்திற்கு எங்களைக் கொண்டு வந்தீர்?" என்று மோசேயைப் பார்த்து கேட்டனர். "எங்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வந்ததென்ன? எங்களை விட்டுவிடும். நாங்கள் எகிப்தியரைச் சேவிப்போம்" என்று உம்மிடம் கூறவில்லையா? இந்த வனாந்திரத்தில் சாவதைப் பார்க்கிலும் எகிப்தியரைச் சேவிப்பது நலமன்றோ? என்று சொன்னார்கள் அப்பொழுது "பயப்பட வேண்டாம்! இன்று தேவன் உங்களுக்கு அருளப்போகும் விடுதலையைக் காண்பீர்கள், திடமனதாயிருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனி என்றுமே நீங்கள் காண்பதில்லை. கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். நீங்கள் சும்மா இருப்பீர்கள்" என்று மோசே ஜனங்களிடம் கூறினார். (யாத்திராகமம் 14:10-14)

இஸ்ரவேலர் எவ்வாறு தேவனுக்குக் காத்திருக்கக் கற்றுக் கொண்டனர் என்று இன்று நாம் படிக்கவிருக்கிறோம். இஸ்ரவேலரை எகிப்தியர் அனுப்பிவிட்டபோது அதைக் குறித்து எகிப்தியர் மனம் வருந்தினர். எனவே, உடனடியாக மீண்டும் இஸ்ரவேலரை அடிமைப்படுத்த பார்வோன் அவர்களைத் தொடர்ந்தான். அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்ட பேரானந்தத்தை இழந்து விட்டோமோ என இஸ்ரவேலர் எண்ணவேண்டியதாயிற்று. பகைவன் தொடர்ந்தான்; இஸ்ரவேலர் அஞ்சினர். எனவே அவர்கள் முறுமுறுத்து, தாங்கள் எகிப்துக்குத் திரும்ப வேண்டுமென விரும்பினர். வனாந்திரத்தில் எதிரியால் தொடரப்படுவதைக் காட்டிலும் அடிமைத்தனமே மேலானது என எண்ணினர். அவர்கள் இறுதியாகச் செய்யும்படி கூறப்பட்ட காரியம் "தேவனுக்குக் காத்திரு" என்பதேயாகும்.
கர்த்தரின் மகிமை தங்களைக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டிருந்தும் அவர்கள் பயத்துடனிருப்பது வியப்பாக இருக்கிறதல்லவா? இந்த மக்கள் பயணித்த போது, மிக ஆச்சரியமான செயல்களைக் கர்த்தர் அவர்களுக்காகச் செய்தார். மிகப் பெரிய மேகத் தூணை அவர்களுக்கு வழிகாட்டியாகப் பகலிலும், பெரிய அக்கினித்தூணை இரவில் அவர்களுக்கு ஒளிதரும்படியும் அனுப்பினார்.
வனாந்திர வழியே பல லட்சம் மக்கள் அக்கினித்தூண் முன் செல்ல, பின்னால் நடந்து சென்றதைக் கற்பனை செய்ய முடிகிறதா? துல்லியமாக எத்தனை பேர் இருந்தனர் எனவும், எவ்வளவு உயரமான ஸ்தம்பம் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் அங்கு பெருங்கூட்டமானபேர் இருந்தனர். எனவே அந்த அக்கினி ஸ்தம்பம் நிச்சயமாக ஒரு சிறு விளக்கொளியாக இருந்திருக்க முடியாது. (அக் கூட்டத்தில் 6 லட்சம் யுத்தவீரர் இருந்திருந்தபடியால், பெண்கள், சிறுவர், முதியோர் உட்பட 20 லட்சம்பேர் இருந்திருப்பர் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.) இது அதிசயமான, மிக பயங்கரமான காரியம். இயற்கைக்கு அப்பாற்பட்ட மிகப் பெரிதான அடையாளத்துடன் கர்த்தர் அவர்களை நடத்தினார். ஆனால் பகைவன் தொடர்ந்து வந்தபோதோ அவர்கள் பயமடைந்தனர்.
இஸ்ரவேலரைப் போன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டிய வேளைகளில் நாமும் அடிக்கடி பயமடைகிறோம். சில வேளைகளில் நமது சூழ்நிலைகள் வழி அடைபட்ட வனாந்திரம் போலவும், நமது பகைவன் விரட்டித் தொடர்வது போலவும் இருக்கின்றது. நாம் தேவனுடைய அதிசய ங்களையும், மகத்துவங்களையும், அற்புதங்களையும், அவர் நம்மைக் காத்த விதங்களையும் நினைவில் கொண்டுள்ளோம். ஆனால் நாம் பயப்படும் போது, தேவனுக்குக் காத்திருப்பது கடினமாயிருக்கிறது.
இஸ்ரவேலர் தங்கள் முன் இரு தெரிந்தெடுப்புகள் இருப்பதாக நினைத்திருக்கலாம். ஒன்று ஓடிவிடுதல், மற்றது சண்டையிடுதல். ஆனால் தேவனுக்குக் காத்திருத்தல் என்பது அவர்கள் எண்ணத்தில் தோன்றவேயில்லை. மோசமான காரியம் நிகழவிருக்கையில் காத்திருப்பது யார்??? எதிர்த்துப் போரிடுவதையோ, ஓடிச் சென்று விடுவதையோதான் அனைவரும் அறிவர். ஆனால் கர்த்தரிடம் ஒரு திட்டம் உள்ளது. மோசே கர்த்தரின் திட்டத்தை அறிந்தான். அதை அவர்களிடம் பகிர்ந்து கொண்டான். "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்." அவர்கள் தேவனுக்குக் காத்திருக்கும் போது, அவர் அவர்களுக்காக யுத்தம் செய்வாரென்பதே தேவனின் திட்டம்!
உங்களில் எத்தனை பேர் அமர்ந்து காத்திருக்க விரும்புகிறீர்கள்? ஒருவரும் இல்லை! இந்த மக்களும் துன்பத்தில் இருந்தனர். நீங்களும் நானும் சில வேளைகளில் துன்பமடைவது போன்றே இவர்களும் துன்பமடைந்தனர். அவர்களுக்கான கர்த்தரின் திட்டம் கர்த்தருக்குக் காத்திருந்து அவரை யுத்தம் செய்ய வைப்பதேயாகும். அடுத்த முறை நீங்கள் துன்பத்தில் இருக்கும் போது, உங்களுக்காக அவர் யுத்தம் செய்வாரா என அவரிடம் கேட்டுப்பாருங்கள். இஸ்ரவேலரைப் போலவே நீங்களும் செய்ய வேண்டிய காரியம் தேவனுக்குக் காத்திருப்பதே!



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

## மேகஸ்தம்பம்

### சிற்றுண்டி

பாப்கார்னை, இஸ்ரவேலரை வனாந்திரத்தில் வழிநடத்தின மேகத்துக்கும் ஒப்பிடலாம்.

ஒட்டும் தன்மையுள்ள பாகினில் குச்சி ஒன்றை முக்கி எடுத்து, அதைக் கிண்ணத்திலுள்ள பாப்கார்னில் இடவும். பாப்கார்ன் குச்சியில் ஒட்டிக் கொள்ளும்.



## கருத்துரை

(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசிக்கலாம்).

## விண்கலங்கள்


நிலவைக் கண்டதும் மனிதன் அதை நோக்கிப் பயணம் செய்ய ஆசைப்பட்டான். விண்வெளிப் பயணத்தில் சந்திக்கும் ஆச்சரியமான ஓரிடம் பற்றி சிந்திப்போம்: விண்வெளி வீரர் பூமியினின்று உயரே எழும்பிய சிறிது நேரத்தில் அவர்கள் 'புவிஈர்ப்பு வலிமை'யினின்று விடுபடுவர். உடனே, எஞ்சிய தூரத்தை இயந்திரத்தை இயக்காமலேயே கடந்து செல்வர். இயந்திரம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விடும் போது, விண்கலம் தனது மிகத் துரித பயணத்தை மேற்கொள்ளும். எனக்கும் உங்களுக்குமுள்ள காரியம் இதுவே. நாம் கடினமாக உழைப்பது அவசியம் எனவும், நாம் அடைய வேண்டியதை அடைய முயற்சியெடுக்க வேண்டுமெனவும் எண்ணுகிறோம். எனினும், விண்வெளி வீரர் விண்கலப்பயணத்தில் செய்வது போல அமர்ந்து காத்திரு என்று கர்த்தர் கூறுகிறார். நாமாகவே எதையும் செய்யாமல், கர்த்தர் நம்மைப் பொறுப்பெடுக்கும்படி விட்டுவிட வேண்டும். விண்வெளி வீரர் மாபெரும் அண்ட சராசரத்தில் தங்கள் பெரிய ஏவுகணை இயந்திரங்களை செயல்படுத்தாமல் நிறுத்திவிட்டு, அந்த வெளியில் செல்ல வேண்டிய வேகத்தில் செல்வோம் என்று நம்புவது அவர்களுக்குக் கடினம் போலத் தோன்றும். கர்த்தர் நம்மைக் காத்திருக்கச் சொல்லும் போது நாம் இளைப்பாறிக் கொண்டே, உண்மையில் மிக வேகமாகப் பயணிக்கிறோம்.

## விண்வெளி கண்டுபிடிப்பு

தேவன்

**பிரகாசமானவர்**


## பயிற்சி வகுப்பு



வார்த்தைகளை சைகை மொழியால் பேசி கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்குக் கொடுத்து, புதிருக்கு விடையை கண்டுபிடிக்க உதவுங்கள்.

### பார்க்கவும்

வலதுகை விரல்கள் இரண்டை கண்களுக்கு தூரத்தில் கொண்டுபோய் அசைக்கவும்




### மக்கள்

பெருவிரலையும் நடுவிரலையும் சேர்த்து, வட்டமிட்டு அசைக்கவும்



### வாக்குறுதி


வலது ஆட்காட்டி விரலை உதட்டில் வைக்கவும்; இடது முஷ்டியைத் திறக்கவும்.





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

பொறியியல்





## கேலக்சி எக்ஸ்பிரஸ் ராக்கெட்

உபகரணங்கள்:
* ஒவ்வொருவருக்கும் விண்கலத்தின் படம் ஒன்று.
* கத்தரிக்கோல் (தாங்களாகவே விண்கலம் உருவாக்கக்கூடிய சிறுவர்களுக்கு, மிகவும் சிறிய குழந்தைகளுக்கு முன்னதாகவே ஆசிரியர் விண்கலத்தை வெட்டி வைத்திருக்க வேண்டும்).
* கிரேயான், வண்ணபென்சில்கள்.
* பசை நாடா அல்லது பசை.
* விருப்பத் தெரிந்தெடுப்பு: காலியான toilet paper குழாயை பயன்படுத்தலாம்
* விருப்பத் தெரிந்தெடுப்பு: ஒளிரும் சிறிதாக வெட்டிய அலுமினிய தாள் அல்லது நட்சத்திரங்களை வெட்டி, ஒட்டி அழகு செய்யலாம்.



செயல் விளக்கம்:
1. எல்லா கோடுகளிலுமிருந்து துண்டுகளை வெட்டி எடுக்கவும்.
2. ஒவ்வொன்றையும் வர்ணம் தீட்டவும்.
3. கேலக்சி எக்ஸ்பிரஸை குழாய்போல சுருட்டி, பிரிந்து விடாதபடி ஒட்டவும்.
4. ஏவுகணையின் அடிப்பகுதியில் சொருகும்படி, இறக்கைகளில் விளிம்புப் பட்டை உள்ளது. ஏவுகணையின் உடற்பகுதியில் அவை சொருகப்படும் போது, ஒன்றன்மேல் ஒன்று உள்ளதா என கவனிக்கவும்.
5. Toilet Paper குழாயை பயன்படுத்தினால் உச்சியிலுள்ள கூம்பினைப் பொருத்து முன் விளிம்புப் பட்டையைத் திருகிவிடவும்.
6. புள்ளியின் மேல் வந்து அமையும்படி கூம்பினை அமைக்கவும். ஏவுகணையின் உச்சியை விளிம்புப் பட்டையுடன் ஒட்டுத்தாள் அல்லது பசையினால் இணைக்கவும்.

விளையாட்டுகள் மற்றும் முடிவிற்காக பாலத்திற்கு மீண்டும் செல்லுதல்




## குச்சியால் தாக்கு

இரு குழுவிலுமிருந்து ஒவ்வொருவர் பங்கெடுப்பர். (2” x 6”) அளவுள்ள பலகையில் நின்று கொள்வர். கையிலுள்ள குச்சியை வாள்போல் வீசி எதிரிலுள்ள வரை பலகையை விட்டு இறங்கும்படி தாக்குவர். தலையில் அடிக்கக்கூடாது. பலகையிலிருந்து ஒரு காலை கீழே வைத்துவிட்டாலும் விளையாட்டில் தோல்விதான். அடுத்தவர் தனது கட்டைமேல் நின்று கொண்டிருப்பார். அவர் வென்றவர். ஆட்டக்காரர் கீழே விழுந்து காயமடையாதிருக்க, கட்டைகள் உயரமாக அமைக்கப்படாதிருக்கவும். குச்சிக்குப் பதிலாக மிருதுவான எந்த பொருளையும் வைத்துக் கொள்ளலாம்.

## பிரமிடு அமைத்தல்

ஒவ்வொரு குழுவிலுமுள்ள 6 பேர் விரைவாக பிரமிடு அமைக்க வேண்டும். மூன்றுபேர் முழங்காலில் நின்று, பார்வையாளரைப் பார்த்து வண்ணம் அடித்தளம் அமைப்பர். அடுத்த இருவர் மூவர் முதுகிலும் ஏறி முழங்காலில் நிற்பர். அனைவரிலும் சிறுவர் முந்தின இருவர் முதுகிலும் ஏறி முழங்கால் ஊன்றி நிற்பர்.
விரைவுடன் முதலில் பிரமிடு அமைக்கும் குழு வென்ற குழுவாகும்!




www.ChildrenAreImportant.com – Children’s ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil


# 5 ஐந்தாம் பயணம்

# தேவனை வழிபடு


விண்வெளி துறைமுகம்:

எஸ்புளோடெல்லைட்.








## உயர எழும்பு

துவக்க நாடகம்

தான் தான் உலகத்திலேயே, சொல்லப் போனால் அண்டசராசரத்திலேயே மிகச் சிறந்த ரோபோ என தன்னைப்பற்றி நினைப்பதாகவும், தானே மிகவும் பயப்படத்தக்கதான ரோபோ என தனது கேப்டன் தன்னைப் புகழ நினைப்பதாகவும் நடிக்கின்றது ரோபோ. கேப்டனோ மனிதனல்ல, தேவனே பயப்படத்தக்க ஒரேஒருவர் என்பதை நிலைநாட்ட முயற்சிக்கின்றார். ஆனால் தான் மட்டுமே பழுதற்றவன் என்று ரோபோ உறுதியாக நினைக்கின்றான்.
நேற்று தான் போக விரும்பிய விண்கலத்துக்கு அவர்கள் போகவிருப்பதால் ரோபோ பதற்றமாகவே இருக்கின்றான். அதினால் அங்கு ஒரு பெருங்காட்சி இருக்கும் எனக் குறிப்பிடுகிறான். சூப்பர்நோவா வெடித்துச் சிதறுவதைக் காணப்போவதை எதிர்ப்பார்க்கின்றார்கள்.
‘எக்ஸ்போடிலைட்’ என்ற விண்கலத்திற்குக் கிளம்பிச் செல்லும் ஆயத்தங்களை விரைவில் செய்கின்றனர். ரோபோ எல்லா காரியங்களையும் சரிவரச் செய்ததாக நினைப்பதையும், ஆனால் அவன் தவறுகள் செய்வதையும் உங்கள் நடிப்பில் காட்டுங்கள். எடுத்துக்காட்டாக, கலத்தில் பறக்கும் போது பறப்பதற்குக் கரங்கள் தனக்குத் தேவைப்படாது எனக் காட்டுகிறான். மேலும் தனது காலணியை அங்கே அணிவதையும் காண்பிக்கிறான். அவன் கவனமற்றிருந்த அந்த வேளையில் கேப்டன் சக்கரத்தைப் பற்றிப் பிடிக்க நேரிட்டு, தங்களைக் கடந்து சென்ற விண்கல் ஒன்றை கவனியாமல் விட்டுவிட நேரிட்டது.
தனது தவற்றினை சில நேரங்களில் உணரத் தவறிய ரோபோ பின்னர் தனது தவற்றினை உணர்ந்து வருந்தினான். கேப்டன் “தேவனை வழிபடு” என்கிற பதத்தை இன்று பகிர்ந்து கொள்ளுகிறார். உன்னையே வழிபட்டுக் கொண்டிராமல் தேவனை வழிபடுதல் என்பதைப் பற்றிய பாடம் இது. சிறுவர்களும் ரோபோவும் “உம்மை வழிபடுவேன்” என்று மிகவும் சத்தமாகக் கூற தங்கள் கரங்களை உயர்த்தி அசைக்க கேப்டன் கற்பிக்கின்றார். விண்கலத்தை நெருங்கும் போது திசை அறிவுதற்கு கூகுள் வரைபடத்தைப் பயன்படுத்த மறந்து விட்டதை கேப்டன் நினைக்கின்றார். எனவே விண்கலத்தை அணுக முடியாமல் தவிக்கிறார். எதையோ யூகித்து, ஜெபிக்கின்றார். வலது இடதுபுறம் திரும்புகின்றார். இறுதியில் சரியான விண்வெளி நிலையத்தை அடைகின்றனர். கேப்டனும், ரோபோவும் தங்களைச் சரியாக வழிநடத்தியது கர்த்தரே என உணர்ந்து, தங்கள் கரங்களை உயர்த்தி “உம்மையே வழிபடுகிறோம்” என்று சத்தமிட்டுக் கூறினர். அவர்கள் தரையிறங்கி, சூப்பர் நோவாவைக் கண்டதைக் குறித்து பிரமிப்படைந்து மேடையினின்று வெளியேறினர்.



## தகவல் விளையாட்டு

“தேவனை வழிபடுதல்”


தேவனை வழிபடுங்கள் என்ற சொற்களைப் பாடத்தினூடே கேட்கும் போதெல்லாம் சிறுவர்கள் “நாங்கள் உம்மை வழிபடுகின்றோம்” என்று தங்கள் கரங்களை உயர்த்தி அசைத்துக் கூறுகின்றனர்.



## தகவல்...

வேதாகம வசனம்.

“அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள்.” சங்கீதம் 150:1



## விண்வெளி கண்டுபிடிப்பு

தேவன்

**பயங்கரமானவர்**



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil



## கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவசர செய்தி

(முக்கிய பாடம்) செங்கடலை கடப்பது.

மோசேயிடம் தேவன் “எகிப்தியர் மேலும் அவர்கள் இரதங்கள் குதிரைகள் மேலும் தண்ணீர் திரும்பி வந்து மூடும்படி உன் கையை சமுத்திரத்திற்கு நேராக நீட்டு” என்றார். மோசே தனது கைகளை சமுத்திரத்துக்கு மேலாக நீட்டவே, விடியற்காலத்தில் சமுத்திரம் தனது இடம் நோக்கி புரண்டு வந்தது. எகிப்தியர் கடலுக்குள் ஓடினர். தேவன் அவர்களைக் கடலில் அமிழ்த்திப் போட்டார். தண்ணீர் திரும்பி வந்தபோது இஸ்ரவேலரைத் தொடர்ந்து வந்த குதிரை வீரரையும், இரதங்களையும், பார்வோனின் சேனை அனைத்தையும் கடல் மூழ்கிவிட்டது. அவர்களில் ஒருவனும் தப்பவில்லை. தங்களது இடது வலது பக்கங்களில் தண்ணீர் மதில்போல் நிற்க, இஸ்ரவேலர் கடல் நடுவே உலர்ந்த தரையின்மேல் நடந்து கடலைக் கடந்தனர். அன்றைய தினம் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்தியரின் கையினின்று இரட்சித்தார். எகிப்தியர் கடற்கரையில் செத்துக் கிடப்பதை இஸ்ரவேலர் கண்டனர்.
அப்போது மோசேயும் இஸ்ரவேலரும் கர்த்தரைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினர்:
கர்த்தரைப் பாடுவேன். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார் பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தளளிவிட்டார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர். அவர் எனக்கு இரட்சிப்புமானவர். அவரே என் தகப்பனுடைய தேவன்; அவரை உயர்த்துவேன்.
(யாத்திராகமம் 14 : 26-30; 15:1-2)

நேற்று இஸ்ரவேலரை நாம் விட்டு வரும்போது அவர்கள் தங்கள் பகைவரால் துன்புறுத்தப்பட்டு தொடரப்பட்டிருந்தனர். அவர்கள் ஓடிவிடவோ யுத்தம் செய்யவோ விரும்பினர். ஆனால் இன்று தேவனுக்குக் காத்திருப்பதைத் தெரிந்து கொண்டனர். தாங்கள் பகைவனுக்கும் சிவந்த சமுத்திரத்திற்குமிடையே அகப்பட்டுள்ளதைக் கண்டு கொண்டனர். செங்கடலுக்கும் பகைவருக்கும் இடையில் அகப்பட்டு, கர்த்தர் தங்களை இரட்சிக்கும்படி காத்திருந்தனர். கர்த்தர் விடுவித்தார். நாமும் தேவனை வழிபடுவோம்!

கர்த்தர் மோசேயிடம் அவனது கோலை செங்கடலின் மீது உயர்த்தும்படி கூறினார். உடனே சமுத்திரம் இரண்டாகப் பிரிந்தது. அப்பெரிய சமுத்திரம் பிரிந்து அவர்கள் நடப்பதற்கென குளிர்ந்த உலர்ந்த பாதையை அளித்தது.

வேதபுத்தகத்தின் மகத்தான அற்புதங்களில் இதுவும் ஒன்று. லட்சக்கணக்கானோர் நடந்து கடந்து செல்ல சமுத்திரம் குவிந்து நின்றது. எகிப்தியர் அவர்களைத் தொடர முயன்றபோதே, சமுத்திரம் அவர்கள் மீது மோதி அடித்து சாகும்படி கர்த்தர் செய்தார். கர்த்தர் நமது யுத்தகங்களைஙச செய்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தேவனுடைய அற்புதங்களுக்காக தேவனை வழிபடுவதை தவிர வேறு ஒன்றும் தேவையில்லை. கடலின் நடுவே உலர்ந்த தரையில் நடந்து, உனது கண்களுக்கு முன்பாக உனது எதிரிகள் கொன்றழிக்கப்படுவதை நீ கற்பனை செய்ய முடிகிறதா?

அவர்கள் செய்த முதற்காரியம் கர்த்தரை, அவரது அதிசயமான கிரியைக்காக மகத்துவத்துக்காக துதித்துப் போற்றினார்கள்.
இதுவே நமது முதல் பதில் வினையாயிருக்கட்டும். அவரைப் போற்றுங்கள். உனது பள்ளியில், தேர்வின் போது அவர் உனக்கு உதவி செய்யும்படி கேள். அவர் உதவி செய்வார். சும்மா இருந்து கொண்டிராதே. அவருக்கு நன்றி செலுத்து. நீ தேர்வினை நன்கு செய்ததுபோல் உணரும்போது தேவனை வழிபடு. உனது பெற்றோர் சண்டையிடுவதைக் கண்டு சோர்ந்து போகும் போது அவர்களுக்கு சமாதானம் அருளும்படி ஜெபி. அவர்கள் சண்டையை நிறுத்துவார்கள். அப்போது தேவனை வழிபட்டுப் போற்று. ஆலயத்தில் உனக்குத் தரப்பட்ட பணியைச் செய்ய உனக்கு உதவும் படி ஜெபி. உனது ஆசிரியருக்குத் துணை நின்று உதவ வேண்டும் என்றால் கர்த்தரின் உதவியை கேள். தேவனை வழிபடு. உனது பள்ளியில் உன்னைத் துன்புறுத்தும் ஒருவனுக்கு எதிராக நீ நிற்க வேண்டியதான நிலையில் கர்த்தரின் உதவியை நாடினால் அவனும் அவன் குடும்பமும் வேறிடம் செல்ல கர்த்தர் நடத்துவார். அப்போது தேவனைத் துதித்து வழிபடு.
நாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் போது பலவிதங்களில் அவர் பதிலளிக்கிறார். கர்த்தர் இடைவிடாமல் நம்மைக் குறித்து கரிசனையுடன் இருந்து உதவி செய்கிறார். நாம் இஸ்ரவேலரைப்போல் தேவனை வழிபடுவோமாக.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

சிற்றுண்டி

# உலர்ந்த தரை வழியாகக் கடலைக் கடத்தல்.

நீல நிறமான ஜெலட்டினைக் கிண்ணத்தில் வைக்கவும். அதற்குள் மீன் வடிவ மிட்டாய்களைப் போடுங்கள். ஜெலட்டின் இறுகும். அதின் நடுப் பகுதியைப் பெயர்த்து எடுத்துவிடுங்கள். இதுவே இஸ்ரவேலர் செங்கடலின் நடுவே நடந்த உலர்ந்த தரையைக் குறிப்பதாகும்.

காண்பிப் பதற்கென மாதிரி ஒன்றை தயாரித்து, பின்னர் கலைந்த விடக்கூடிய கப்-ஐ ஜெல்லி நிரப்பி சிறுவர்களுக்கு சிற்றுண்டியாகக் கொடுங்கள்.



# கருத்துரை

(விண்வெளி நடைமுறைப் பயன்பாட்டை சிற்றுண்டி நேரத்தில் கலந்தாலோசிக்கலாம்).

## சூப்பர் நோவா

சில நட்சத்திரங்கள் மிகப் பெரியவைகளாகி, அதன் உள்ளழுத்தம் தாங்க இயலாத அளவு அதிகரிக்கின்றது. அது பெரியதாகி, இறுதியில் வெடித்துச் சிதறி பல இலட்சக் கணக்கான துண்டுகளாக விண்வெளியில் சிதறுகின்றது. இவற்றை அறிவியல் அறிஞர்கள் சூப்பர் நோவா என்றழைக்கினறா். இஸ்ரவேலா் சாவினின்றும், அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்கப்பட்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வந்தபோது அவர்களது நன்றியுணா்வும், மகிழ்ச்சியும் அவர்களுக்குள் மிகப் பெரிய அழுத்தத்தை உண்டாக்கி இருக்கும். அவர்கள் நன்றியுடன் மனமகிழ்ந்து, பொங்கி வழிந்து தங்களைக் காத்த தேவனை வாழ்த்தி வணங்கினா், என்று நான் கற்பனை செய்கிறேன். சூப்பர் நோவாவைப் போல நீங்களும் நானும் கா்த்தா் நம்மை விடுவிக்கும் வேளையில் அவா் அருளிய மீட்புக்காக அவரைத் துதித்துப் புகழ்ந்து வழிபடாமலிருக்க முடியாது.





வார்த்தைகளை சைகை மொழியால் பேசி கதையை மறு ஆய்வு செய்யுங்கள். அதன்பின் மாணவரின் கையேடுகளை அவர்களுக்குக் கொடுத்து, புதிருக்கு விடையை கண்டுபிடிக்க உதவுங்கள்.

### பாடல்

இடது உள்ளங்கையின் முன் வலது கரத்தை முன்பின் அசைக்கவும்



### செய்து காண்பி

பெருவிரல்களும் ஆள்காட்டி விரல்களும் நீட்டப்பட்டு தலைக்கு மேல் கரங்களை உயர்த்தவும்.





### கொண்டாட்டம்


பெருவிரலும் ஆள்காட்டி விரலும் இணைய, சிறு வட்டமிட்டுக் காட்டுதல்



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

## பொறியியல்









# செங்கடலைக் கடத்தல்


உபகரணங்கள்:
வசனம் எழுதப்பட்ட வெள்ளைத்தாள், அல்லது கடல்போல அச்சிடப்பட்ட தாள், நீல நிற கிரேயான்ஸ், கலர் பென்சில், மார்க்கர், மை, வர்ணங்கள்.

செயல் விளக்கம்:
1. தண்ணீர் இருக்கும் பகுதியையும் உலர்ந்த பகுதியையும் வர்ணம் தீட்டுக.
2. உலர்ந்த தரைக்கான குறிப்பிட்டுள்ள இடம் வரைக்கும் உள்ள புள்ளியிட்ட பகுதிவரை வெட்டி எடுக்கவும்.
3. இப்பகுதியைக் குச்சியில் சுருட்டி விடுக. பேனா அல்லது கிரேயானிலும் சுருட்டலாம். அதிகப்படியாக:
கடற்கரைப் பகுதியில் சிறு கற்களை ஒட்டி வைக்கலாம்.

## விளையாட்டுகள் மற்றும் முடிவிற்காக பாலத்திற்கு மீண்டும் செல்லுதல்



# மெஸ்ஸி மார்ஸ்மெல்லோ டிராப் (இனிப்பு உருண்டை எறிதல்)




ஒவ்வொரு குழுவும் தனது குழு அங்கத்தினரின் நெற்றியில் வைக்கப்பட்டுள்ள கிண்ணத்திற்குள் இனிப்பு உருண்டையை எறிதல். சிறுவர்களைக் கவரும் ஒரு விளையாட்டு.

இரு குழுவிலுமுள்ள 5 பேர் இதில் பங்கு பெறுகின்றனர். ஒரு ஏணியோ அல்லது நாற்காலியோ இருவரால் அசையாமல் பிடித்துக் கொள்ளப்படும். ஒரு குழு ஒரு நேரத்தில் விளையாடும். அணியில் இருவர் தலைகள் தொடும்படி தரையில் படுத்திருப்பர். துணிகள் அழுக்காகாதபடி முகம் மட்டும் தெரியும் படி கண்ணாடிப் பையினால் மூடவும். டி - ஷர்ட் போல இதை அணியவும். பாதுகாப்பு கண்ணாடிகளை அணிவது நல்லது. இருகிண்ணங்களில் இனிப்பு உருண்டைகளை சாக்லேட் கூழ்மத்தில் போட்டு வைக்கவும்.

ஒருவர் ஒரு கிண்ணத்துடன் ஏணியில் ஏறுகிறார். இருவர் ஏணியைப் பிடித்திருக்க, நெற்றியில் ஒரு கோப்பையுடன் இருவர் படுத்திருப்பர். ஆட்டம் தொடங்குகையில் இனிப்பு உருண்டைகளை வைத்திருப்பவர் அவற்றை எடுத்து படுத்திருப்பவர் நெற்றியிலுள்ள கோப்பைக்குள் போடுகிறார். 60 வினாடிகளுக்குள் போடப்படும் இனிப்பு உருண்டைகள் கணக்கிடப்படும். சாப்பிடப்பட்டால் அவை எண்ணப்படாது! அதன் பின் அடுத்த அணியினர் 60 வினாடிகள் விளையாடுவர். எந்த அணி அதிக இனிப்பு உருண்டைகளை கோப்பைக்குள் போட்டனரோ அந்த அணி வென்றதாகும்.





# கேக் ஓட்டம்


ஒவ்வொரு அணியிலிருந்தும் இருவர் கேக் ஒன்றை விரைவில் அலங்கரிக்க வேண்டும். சிறுவர்களைப் பரவசப்படுத்தும் விளையாட்டு இது. இரு கேக்குகள் ஏற்கெனவே அயத்தம் செய்யப்படுகிறது. அணியும் மேலாடை, கத்தி, தூவிகள் போன்றவை அளிக்கப்படுகிறது. ஆட்டம் தொடங்கியதும் அணியினர் மேலாடை அணிந்து, கேக்கை அலங்கரிக்க வேண்டும். அழகுபடுத்தி அதில் ஒரு துண்டினை ருசிபார்க்க வேண்டும். வேகமாகச் செய்து முடித்த அணி வெற்றி பெற்றதாகும். போனசாக வேதாகமப் பள்ளி மாணவர் கேக் துண்டு பெறுவர்!




www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil


“நான் தேவனை வழிபடுவேன்.”
சங்கீதம் 3:4


“நான் தேவனை வழிபடுவேன்.”
சங்கீதம் 3:4




“இதோ, அடியேன் இருக்கிறேன்;
என்னை அனுப்பும் என்றேன்.”
ஏசாயா 6:8



“இதோ, அடியேன் இருக்கிறேன்;
என்னை அனுப்பும் என்றேன்.”
ஏசாயா 6:8



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil


கேலக்ஸி எக்ஸ்பிரஸ்
கேலக்ஸி எக்ஸ்பிரஸ்



அவருடைய

வல்லமை

விளங்கும்

ஆகாய

விரிவைப்பார்த்து

அவரைத்


துதியுங்கள்.

சங்கீதம் 150:1

விண் ஓடத்தில் ஏறிக்கொள்ள
உங்களை அழைக்கிறோம்...

# ஹை குட்டீஸ்!

## கேலக்ஸி எக்ஸ்பிரஸ்




தேவனுடைய மகிமையை ஆராய்ச்சி செய்ய ஒரு வானியல் சாகசம்! அங்கு சிற்றுண்டி, கைவினை, விளையாட்டுக்கள், பாடல்கள், ராக்கெட்டுகள் மற்றும் வேடிக்கைகள் பல உண்டு. வாருங்கள்!

**எங்கே:**

**எப்பொழுது:**

---

## கேலக்ஸி எக்ஸ்பிரஸ்



# இந்த சான்றிதழ்

[ ______________________________ க்கு ]

‘கேலக்சி எக்ஸ்பிரஸ்’ என்ற விடுமுறை வேதாகம பள்ளியில் பங்கேற்றதற்காக வழங்கப்பட்டது.

**வழங்கியவர் :** ______________________




www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

ஹை குட்டீஸ்!

விண் ஓடத்தில் ஏறிக்கொள்ள
உங்களை அழைக்கிறோம்...




தேவனுடைய மகிமையை ஆராய்ச்சி செய்ய ஒரு வானியல் சாகசம்!
அங்கு சிற்றுண்டி, கைவினை, விளையாட்டுக்கள், பாடல்கள்,
ராக்கெட்டுகள் மற்றும் வேடிக்கைகள் பல உண்டு. வாருங்கள்!



## எங்கே:

## எப்பொழுது:




| எளிதானது | நடுநிலையானது | கடினமானது |
|---|---|---|
| 4-6 வயதினருக்கு, வாசிக்க வேண்டாம். | 7-9 வயதினருக்கு, சிலவற்றை வாசிக்க வேண்டும். | 10-12 வயதினருக்கு, வாசித்தல் மற்றும் கடினமான புதிர்கள். |










## மாணவர் கையேடுகள்

உங்கள் விபிஎஸ்-ல் பங்கேற்கும் மாணவர்கள் ஒவ்வொரு நாளுக்குரிய பாடத்தை புதிர்கள், கைவேலைகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் மறு ஆய்வு செய்வதில் மகிழ்ச்சி அடைவர்.

உங்களுடைய குழுவை முழுமையான நிகழ்ச்சிகளோடு தயார்படுத்தி உங்களுடைய விபிஎஸ்-ஐ ஒரு சாகசமான வானியல் அனுபவமாக்குங்கள்! இலவசமாக இணையதளத்திலிருந்து இந்த தகவல்களையெல்லாம் எடுத்துக் கொள்ள இவை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கைவேலைக்கு தேவையான பொருட்களை உங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள இணையதளத்தில் சின்னங்கள் மற்றும் கிராபிக்ஸுக்களைக் காணலாம். உங்களுடைய ஆசிரியர்களை பரபரப்பான உற்சாகத்தில் ஆழ்த்தி, உங்கள் சிறுவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்து பெருமளவிலான மகிழ்ச்சி கொள்ளச் செய்யுங்கள்!

## www.ChildrenAreImportant.com/galaxy

ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ அதிக அளவிலான விபிஎஸ் பொருட்கள் தேவையானால் எங்களை அணுகுங்கள்.

நாங்கள் மெக்ஸிகோவில் இருக்கிறோம் :
01-592-924-9041
Info@ChildrenAreImportant.com

சிறுவர்கள் முக்கியமானவர்கள்

## தலைவர் நோட்டீசுகள்

விபிஎஸ்-ன் ஒவ்வொரு துறையைப் பற்றிய தகவல்களை சுலபமாக பயன்படுத்தி தகுந்த தலைவர்களிடம் கொடுக்க, அவைத் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே தகவல் இயக்குநர் கையேட்டிலும் உள்ளது.




## இயக்குநர் கையேடு

கேலக்ஸி எக்ஸ்பிரஸ் விபிஎஸ்-ற்கு தேவையான அனைத்து தகவல்களையும் இந்த ஒரே புத்தகத்தில் பெற்றுக் கொள்ளலாம்!
- இதில் திட்டமிடுதல், தன்னார்வ தொண்டர்கள், பாடங்கள் மற்றும் கூடுதலான யோசனைகள் உண்டு.






## கோள்களின் போஸ்டர்க்ள்

இரண்டாம் நாள் விபிஎஸ்-ற்கு கோள்களின் பிரமாண்டமான உருவங்களையும், நமது பால்வெளி நட்சத்திரங்களையும் காண்பிக்க இப்படங்களைப் பயன்படுத்துங்கள்.




## போஸ்டர் - அழைப்பிற்கு

இந்த விபிஎஸ் சிறப்பாக நடைபெற போஸ்டரை உங்கள் சுற்றுப்புறத்தில் தொங்கவிடுங்கள்!

## இசை சிடி மற்றும் டிவிடி




விபிஎஸ் க்கு நாங்கள் தயாரித்த இசை மற்றும் நடனம் கொண்டு சிறுவர்களை உற்சாகப்படுத்துங்கள்! பாடல்களை இணையத்தளத்திருந்தோ அல்லது Youtube இல் இருந்து கேட்கலாம். (இப்பொழுது பாடல்கள் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது)




## அழைப்பிதழ்

இந்த அழைப்பிதழ்மூலம் அநேக சிறுவர்களை விபிஎஸ் க்கு அழைத்து இயேசுவைப்பற்றிக் கூறுங்கள்.




## சான்றிதழ்

விபிஎஸ் ல் பங்கெடுத்தற்காக சிறுவர்களுக்கு இந்த சான்றிதழ் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள்.

## கைவேலை


சிறுவர்களுக்கு கைவேலை என்றால் மிகவும் பிடிக்கும்! இதில் ஒரு நாளைக்கு 5 கைவேலைகளும், படங்களும் உள்ளன. இதில் உபயோகிக்கப்பட்ட பொருட்கள் மார்க்கெட்டில் எளிதாகக் கிடைக்கக்கூடியது. இது சிறுவர்களை உற்சாகப்படுத்தி அந்த நாளுக்கான பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். ஒவ்வொரு கைவேலையும் ஒரு சிறுவருக்கு ஒரு தாள் என்ற வகையில், சில கலர் பேனா அல்லது கோந்து பயன்படுத்தவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

## மேடை அலங்காரம் (பின்னணி)

மேடையின் பின்னணி அலங்காரத்தைக் கொண்டு சிறு வர்களின் கற்பனைத் திறனை உற்சாகப்படுத்துங்கள். இணையதளத்திலிருந்து pdf யை எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது 4 x 2 மீட்டர் அல்லது 3 x 1.5 மீட்டர் அளவு போஸ்டரை அச்சடியுங்கள்.







www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers - Tamil

# இந்த விபிஎஸ் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

எங்களுடைய புது ஞாயிறு பள்ளி
பொருட்களை உபயோகித்துப் பாருங்கள்:




சிறுவர்கள் இயேசுவின் உவமைகளில் மறைந்திருக்கும் உண்மையை இரகசிய செய்திகள்மூலமாக துப்பறிவர்! வயதில் பெரிய சிறுவர்கள் மத்தேயு சுவிசேஷத்தை முழுவதுமாகப் படிக்க உற்சாகப்படுத்துங்கள். நீங்கள் சிறுவர்களின் வாழ்க்கையை மாற்ற இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு உதவ இருக்கிறோம்.



எங்களுடைய அனுமதி இன்றி, எங்களுடைய பொருட்களை இலவசமாக இணையத்தளத்திலிருந்து எடுத்து, இலவசமாக உபயோகித்து, இலவசமாக அச்சிட்டு, இலவசமாக மற்ற திருச்சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் கொடுக்கலாம்.

## www.ChildrenAreImportant.com/Detectives

Manual Galaxy Tamil
13602

www.ChildrenAreImportant.com
info@childrenareimportant.com
We are located in Mexico.
DK Editorial Pro-Visión A.C.

சிறுவர்கள் முக்கியமானவர்கள்